Registered No. M. 2330 ACC. NO. 33773. SIDDHANTHA
Vol. 25—No. 6

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'


மலர் 25 | நந்தன ஆனி 1952 ஜூன் | இதழ்

உள்ளுறை


பத்திராசிரியர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர்: வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்
53, திருவள்ளுவர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15



சிவமலை உட்புறம்



சிவமலை முன்பார்வை

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

மலர் 25 | நந்தன ஆனி 1952 ஜூன் | இதழ் 6

1. நாட்டு ஒலி

கதாப் பிரசங்கங்கள் :—நமது நாட்டில் நாட்டுப்புறங்களில் கோடைக் காலங்களில் புராணப் பிரசங்கங்கள் நடைபெறுவது வழக்கம். படித்தவர்களைக் காட்டிலும் படியாதவர்களே அவ்விதப் பிரசங்கங்களில் ஈடுபடுவார்கள். அவ்விதப் பிரசங்கங்களைக் கேட்கப் பொதுமக்கள் மிகவும் ஆர்வம் கொண்டிருப்பார்கள். பள்ளிப் படிப்புப் பெருத வயது வந்த ஆண்மக்களும் பெண்மக்களும் இவ்விதப் பிரசங்கங்களினுல் அறிவு பெறுவதோடு சமயத்திலும் ஈடுபாடு கொள்வார்கள். இவ்வித பிரசங்கங்களை முதியோர் கல்வித் திட்டம் என்றும் கூறலாம். இவ்விதப் பிரசங்கங்களைக் கேட்ட நாட்டுப் புறத்து மக்கள் நகர மக்களைக் காட்டிலும் பொது அறிவிற் சிறந்தவர்கள் என்றும் கூறலாம். எந்தத் தெருத்திண்ணைப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் சிறு பிள்ளைகளுக்கு எழுத்து அறிவித்தாரோ, அதே உபாத்தியாயர் இராக் காலங்களிலே முதியவர்களுக்குப் புராணப் பிரசங்கங்கள் செய்து அறிவை வளர்த்துவார். அவ்வித உபாத்தியாயர்களுக்குச் சிறுபிள்ளைகள் உதவும் பள்ளிச்சம்பளம் வாழ்க்கைக்குப் போதாமல் இருக்கும். மாலை நேரங்களிலும் இரவு நேரங்களிலும் முதியோர்கள் உல்லாசமாகப் பொழுது போக்கப் புராணக் கதைகள் மூலமாகப் பிரசங்கங்கள் செய்து அதனுல் சிறிது ஊதியமும் பெற்று அவ்வுபாத்தியாயர் வாழ்க்கையின் தொல்லையைத் தீர்த்துக் கொள்ளுவார். இந்த வகையில்

கிராமப்பள்ளி ஆசிரியர் சிறுவர்களுக்கும்பெரியவர்களுக்கும் ஒருங்கே ஆசிரியன் ஆகித் தன் கடமையை நிறைவேற்றுவ தன்றித் தன் வாழ்க்கைக்கும் போதுமான ஊதியத்தை இரண்டு வகைகளிலும் நிறைவேற்றிக் கொள்ளுவார். இந்த வகையில் பண்டைப் பள்ளி ஆசிரியர் நாட்டிற்குப் பெரிய உபகாரியாக இருந்தார்.

ஆனல் தற்காலத்திலோ கிராமப் பள்ளி ஆசிரியருக்கு எழுத்து அறிவிப்பதை ஒழித்து வேறு ஓர் ஆற்றலும் இல்லை. ஆகவே சிறுபிள்ளைகளுக்குக் கற்பித்துக் கொடுக்கும் தொழிலை விடுத்துப் பயன்படத் தக்க புராணப் பிரசங் கங்களைச் செய்வதற்கு அறிவும் ஆற்றலும் இல்லை. ஆகவே அப்படிப்பட்ட பள்ளி ஆசிரியருக்கு ஊதியம் பாதியாய் விட்டது. அவருக்கு வறுமை என்பது நிரந்தரமாக ஏற் பட்டதொரு குணமுமாகிவிட்டது. ஆனல் நாட்டுப்புறங் களில் புராணப் பிரசங்கங்கள் இல்லையோ என்று கேட்க லாம். பள்ளி உபாத்தியாயர் பிரசங்கம் செய்வதை நிறுத்தி விட்டாலும் வெளியூரிலிருந்து வருகிற புராணப் பிரசங்கி கள் ஒவ்வொரு தடவை ஊதியம் பெறுவதற்காக வந்து பிரசங்கங்கள் செய்து மக்களை மகிழ்விப்பதுண்டு. இரா ஜம் ஐயர் அவர்கள் கமலாம்பாள் சரித்திரத்தில் உண்டு பண்ணின ' அம்மையப்ப பிள்ளைகள் ' தற்போது நாட்டுப் புறங்களில் இல்லை. பள்ளியாசிரியரின் தொழிலும் புரா ணப் பிரசங்கத் தொழிலும் வெவ்வேருகித் தொழிற்பிரி வினை ஏற்பட்டுவிட்டது. அதனுல் இருவகைத் தொழிலாளர் களுடைய வாழ்க்கை நலங்களும் பாதியளவிற்குக் குறைந்து போய் இருசாராரும் கடின வாழ்க்கை வாழுகிருர்கள்.

2. நகர நிலைமை:—நாட்டுப் புறங்களில் ஆசிரியர் களுடைய நிலைமை இவ்வாறு இரண்டுபட்டுப்போக, நகரங் களில் அவர்கள் நிலைமை எவ்வாறு இருக்கின்றது என்று எல்லாரும் அறிவோம். வெகு காலமாகவே நகரங்களில் பள்ளியாசிரியர் தொழிற்கும் புராணப் பிரசங்கத்திற்கும் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. பள்ளி ஆசிரியர்கள் தம் தொழிலுக்கு வேண்டிய படிப்பும் பயிற்சியுமே பெற் றிருக்கிருர்கள். அதற்குத் தகுந்த கூலிதான் கிடைத்தது. அக்கூலியும் தற்போது போதாததாகி விட்டது. தற்காலப் படிப்புத் திட்டத்தில் பள்ளியாசிரியர்களுக்குப் போதிய நேர

மும், பிற வருவாய் பெறுவதற்குச் சலுகையும் இல்லாமல் போய்விட்டது. ஆகவே இரண்டாவது தொழிலாக இருக்கக்கூடிய பிரசங்கத் தொழில்போய் மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்தும் வேலை ஒன்று புதிதாக வந்து விட்டது.

ஆனால் நகரங்களில் புராணப் பிரசங்கங்கள் இல்லாமற்போய் விட்டனவோ என்று கேட்கலாம். சென்ற 20, 30 ஆண்டுகளாகப் புராணப் பிரசங்கங்கள் என்றால் மக்கள் வெறுக்கத் தொடங்கினார்கள். பிறகு நாட்டில் மொழிப்பற்று வளரத் தொடங்கிற்று. அதன் பலனாகச் சங்கங்கள் தோன்றி ஆராய்ச்சி உரைகளை நிகழ்த்தத் தொடங்கினார்கள். திருவள்ளுவர், கம்பர், சேக்கிழார், மணிவாசகர் முதலியோர்களுடைய கருத்துக்களை எடுத்துரைக்கத் தொடங்கினார்கள். இவ்வாறு நாட்டில் தமிழ் மொழியின்மூலமாகச் சொற்பொழிவுகள் தோன்றத்தொடங்கின. மொழியில் ஆர்வம் தோன்றத் தோன்ற, பழைய புராணங்களில் நம்பிக்கைக் குறைந்துவிட்டது. பழைய புராணங்களை எரிக்கவேண்டும் என்ற ஒரு கிளர்ச்சியும் தோன்றிற்று. ஆனால் அது வெற்றி பெறவில்லை. எங்கே அழிவு முயற்சி தோன்றுகிறதோ அங்கே எதிர்ப்பும் தோன்றுவது இயற்கை. ஒருகால் அழிவு முயற்சிக்கு ஏற்றம் இருந்தது. நாளா வட்டத்தில் அவ்வேற்றத்தின் வலிமை குறையத் தொடங்கி எதிர்ப்பின் வலிவை உயர்த்திற்று. அந்தக் காரணத்தினால் நகரங்களிலே மீண்டும் புராணப் பிரசங்கங்கள் தோன்றத் தொடங்கின. இந்த மறு மலர்ச்சிக்கு வைதிக நிலையங்கள் ஆதரவு தந்தன. ஒருநாள் ஒரு மணிநேரம் பிரசங்கத்தைக் கேட்க மனமும், நேரமும் இல்லாத மக்கள் 10-நாள் 20-நாள் மட்டுமன்றி 48 நாள்களும் அதாவது மண்டலக் கணக்கில் சலிப்பின்றி ஓயாத சொன்மாரியைக் கேட்கத் தொடங்குகிறார்கள். பாமரர்கள் மட்டுமோ ஆங்கிலம் கற்ற பணக்காரர்களும் கால் வலியையும் பாராட்டாது தரையில் உட்கார்ந்து பழைய புராணங்களைக் கேட்கிறார்கள்.

இதுவரை நாயன்மார் வரலாறுகள், ஆழ்வார் ஆதியர் வரலாறுகள், ஐம்பெரும் காவியங்கள் முதலியவைகளைப் பற்றி ஆற்றிய சொற்பொழிவுகளைக் கேட்ட படிப்பாளி

கள் இப்போது இதிகாசப் புராணங்களையும் கேட்கத் தொடங்குகிறார்கள். முன்னர் ஒரு சொற்பொழிவுக்கு ஒரு மணிநேரம் அதிகம் என்று சொன்னபேர்களே தற்போது 3 மணி நேரம் உட்கார்ந்து கேட்கிறார்கள். தமிழறிஞர் சொற்களே வேண்டுமென்று கூறிய மக்கள் தற்போது வடமொழிச் சுலோகங்களைப் பொருள் தெரியாவிட்டாலும் ஆயிரக்கணக்கில் கேட்டு மகிழத் தயாராயிருக்கிறார்கள். இவ்வாறு மாறுதல் ஏற்பட்டதற்குக் காரணம் யாது என்று நாம் ஆராய்கிறோமா?

3. பலன் கருதியா?—தற்காலத்தில் போற்றப்படும் புராணப் பிரசங்கங்கள் பெரும்பாலும் பாரதம், இராமாயணம், பாகவதம் என்பன. சிறுபான்மையாகக் கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் பகுதிகள் முதலியன. இவைகளைச் செய்பவர்கள் சோழநாடு, தொண்டை நாடு முதலிய கிழக்கு நாட்டவர்களே. கொங்கு நாட்டில் அன்னார்கள் செய்யும் பிரசங்கங்களின் தொகை அதிகமாகிக் கொண்டு வருகின்றன. வடமொழிக் கலப்பை விரும்பாத காலத்தில் வடமொழிக் கலப்பும், கதைகளும் ஏன் ஆதரிக்கப்படுகின்றன?

இப்பிரசங்கங்களை ஆதரிக்கிற மக்கள் பெரும்பாலும் ஒரு சங்கத்தின் பெயராலே வைத்து நடத்துவதைக் காண்கிறோம். ஆனால், அதனை உண்மையாக ஊடுருவிப் பார்க்கும்போது தனி மனிதர்களின் உதவியாலே அவை நடைபெறுகின்றன என அறிவோம். அத்தனி மனிதர்களும் பெரும்பாலும் செல்வவான்களாக இருப்பார்கள். அந்தக் காரணத்தினால்தான் இவ்வாறான பிரசங்கங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

புராணப் பிரசங்கியார்கள் தங்கள் ஆதரவாளர்களைப் புகழாமல் இருப்பதில்லை. சமயம் கிடைத்தபோதெல்லாம் ஆதரிப்போர்களுடைய பெருமைகளை மிகைப்படுத்திக் கூறுவார்கள். நன்றி கூறுவது இயற்கைதானே? அவ்வாறு கூறினால் என்ன குறை? என்றும் தோன்றலாம்.

இதுமட்டுமல்ல, பிரசங்கம் செய்விப்பதனால் உண்டாகும் பலன்களை மிகமிகப் பெருக்கிக் கூறுவார்கள். அதற்குச் சான்றுகளும் எடுத்துக் காட்டுவார்கள். இராமாயண, பாரத, பாகவதங்களில் இறுதியில் பலன்கள் கூறப்

பட்டிருக்கும். மேலும் பலன்களைக் கூறும் தனிச் சருக்கங்களும் உண்டு. அவைகளை வாசித்துப் பார்த்தால், மனிதனுக்கு நேரிடக் கூடிய எப்படிப்பட்ட துன்பமும் பிரசங்கம் வைப்பதனுல் நீங்கிவிடும்என்று அதில் காணலாம். துன்பம் போவது மட்டுமல்ல, இன்பமும் ஆக்கமும் பெருகும் என்றும் அவைகள் கற்பிக்கும். ஆகையால் செல்வவான்கள் பிரசங்கங்களை ஏன் வைக்கமாட்டார்கள் ?

மற்றொரு சுவைபடத்தக்க காரணம் உண்டு. புராணப் பிரசங்கங்கள் வைக்கும் பெரியோர்களுக் கெல்லாம் ஏதாவது ஒரு கோரிக்கை மனதுக்குள் இருக்கும். அக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற நோக்கம் பெரும்பாலும் இருக்கும். செல்வவான்களுக்குச் சாதாரணமாக இருப்பது உடல் நலம் இன்மையே. அதைத் தீர்த்துக்கொள்ள மருத்துவர்கள் இருப்பார்கள். ஆனுல் சுலபமாகத் தீர்ப்பது புராணப் பிரசங்கம் என்று பிரசங்கியார்கள் கூறுவது உண்டு. அதற்கு ஆதாரம் வடமொழி நூல்களிலேயே உண்டு. கடினமான முறைகளைக் காட்டிலும் எளிதான முறைகளை ஏற்றுக்கொள்வது மானிட இயல்பு. ஆகவே புராணப் பிரசங்கங்களை வைப்பதில் செல்வவான்கள் ஆர்வம் காட்டுவது இயல்பே அல்லவா ? சென்ற இரண்டு ஆண்டுகளாக நடந்துவந்த நீண்ட கதாப் பிரசங்கங்களின் அடிப்படைக் காரணங்கள் இதுவாக இருக்க நமக்கு அது வியப்பைத் தருகின்றதல்லலா ?

4. வடமொழி நூல்களில் பலஸ்ருதி:—பாரதம் இராமாயணம் என்ற இதிகாசங்களுக்குள் பலஸ்ருதி அல்லது பயனியல் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. தனி அதிகாரங்களே படலங்களாகவும் சருக்கங்களாகவும் அவைகளில் உண்டு. நூலின் பகுதிகளாக இருப்பது மட்டுமன்று. பின்னுல் எழுதிப் பாயிரங்களாக சேர்க்கப்பட்டவைகளுமுண்டு. பாரதத்தில் ஒரு பகுதியாக இருக்கும் பகவத் கீதைக்குக் "கீதாப் பிரபாவம்" என்ற தனிமையான பாயிரம் ஒன்று உண்டு. அதைப் படித்தால், கீதையைப் படிப்பதிலும் கேட்பதிலும் அடையும்படியான பலன்கள் நிரம்பக் கூறியிருக்கின்றன. படித்தாலே போதும். அதன்படி நடக்க வேண்டியதும் இல்லை எனத் தோன்றும். இவ்விதமாக வெளிப்பெருமைகளைப் பின்காலத்தார்கள் சொல்லி

வைத்திருப்பதனால் பொதுமக்களுக்கு உண்மையான நிலை தோன்றுவதில்லை. இனி இதிகாசங்களைப் போல பதினெண் புராணங்களிலும், உபபுராணங்களிலும், மான்மியங்களிலும்கூட பிரபாவங்கள் கூறப்பட்டுள்ளன. இதோபதேசம் முதலிய கதைத் தொகுதிகளிலும் ஜோதிடம் முதலிய கலை நூல்களிலுங் கூட பல ஸ்ருதிகள் கூறப்பட்டுள்ளன. பல ஸ்ருதிகூறுவதென்பது இலக்கண விதியாகவும் ஆய்விட்டது.

இனி பெரிய நூல்களே யன்றி சிறு பிரபந்தங்களாகிய தோத்திரங்களிலும் இறுதியில் பலன் கூறப்பட்டுள்ளது. வடமொழி விநாயக ஸ்துதியில் விநாயகருடைய திருநாமங்களைக் கூறினால், தனம் வேண்டுமென்றால் தனம் கிடைக்கும், சுகம் வேண்டுமென்றால் சுகம் கிடைக்கும், ஆயுள் வேண்டுமென்றால் ஆயுள் கிடைக்கும், மோக்ஷம் வேண்டுமென்றாலும் மோக்ஷம் கிடைக்குமென்று எழுதப்பட்டிருக்கிறது. மற்றும், பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களின் பெயர்களை சொல்லும் சுலோகங்களை நாள்தோறும் சொன்னால் ஏழு ஜென்மங்களில் செய்த பாவங்கள் போகும் என்று கூறப்பட்டுள்ளது. இத்தனை சுலபத்தில் பாவத்தின் போக்குதலும், வீட்டின் பேறும் கிடைத்துவிடுமா என்று நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. எது எடுத்தாலும் உயர்வுநவிற்சி அணியா என்று நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறோம்.

5. தமிழ் நூல்களிலுமா ?—மேலே வடமொழியில் ஏற்பட்டுள்ள ஒரு வழக்கத்தைக் கூறினோம். தமிழ் நூல்களிலும் அவ்வழக்கம் புகுந்து விட்டதை அறியவேண்டும். அவ்வழக்கம் வடமொழியைப் பின்பற்றியே தமிழில்வந்திருக்கின்றது என்று கூறுவதற்குப் போதிய சான்றுகள் இருக்கின்றன. பழைய சங்க நூல்களுள் நூல்களைப் படிப்பதனால் உண்டாகும் பலன்கள் கூறப்படவில்லை. பின்னாளில் சைவ வைணவ மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்தில் வடமொழியைப் பின்பற்றித் தமிழிலும் பலன் கூறத் தொடங்கிவிட்டார்கள். புராணக் கதைகளில் பலன் கூறியிருப்பது சகஜம்தான். ஏனெனில் அவைகள் மொழிபெயர்ப்புகள். முதல்நூலில் உள்ளது வழிநூலுக்கும் வந்துவிடும். அதனைத் தமிழ்நூல்களாகிய தல புராணங்களிலும் காண்கிறோம். இது 'இலக்கணப் போலி' போன்றது ஆகும்.

தமிழிலே முதல் நூல்களாகத் திருமுறைகள் இருக்கின்றன. அவைகளிலே பயன் கூறியிருக்குமானால், அதுவும் இலக்கணப் போலி என்றே உரைக்கவேண்டுமல்லவா? தேவாரங்கள் துதிப்பாடல்களாகும்; வடமொழி தோத்திரங்கள்போல உள்ளவை. சம்பந்தர், சுந்தரர் தேவாரங்களில் திருக்கடைக் காப்புகள் இருக்கும். அப்பர் தேவாரங்களில் அவையில்லை. அப்பர் தமிழர், அவர் வடமொழியைப் பின்பற்றவில்லை. சம்பந்தரும் சுந்தரரும் அந்தணர்கள். வடமொழியைப் பின்பற்றினார்கள். சம்பந்தர் திருக்கடைக் காப்பில்,

"தமிழ்மாலை பாடவல்லார் நல்லாரே"

"பண்ணியல் பாடல் வல்லார்கள் பாவமிலரே"

"வாழ்த்த வல்லவர் இமையோரோடு கேடிலரே"

"செந்தமிழ் வல்லார் வானுலகாடல் முறைமையே"

"ஒண்தமிழ் வல்லார்க்கு அரும்பழிபாவம் அவலம் இலரே"

என்பன போன்று ஒவ்வொரு பதிகத்திலும் காணலாம்.

அது போலவே சுந்தரரும்

"இவை கற்றுவல்ல அடியார் விண்முழு தாள்பவரே"

"பத்து இவைகற்று வல்லார் வண்தறையானை
மன்னரவராகி விண்முழு தாள்பவரே"

"மாலைகள் வல்லார் தடுமாற் றிலரே"

"பத்தும் வல்லார் பறையும் தாம்செய்த பாவம்தானே"

"உரைப்பார்களும் கேட்பவரும் கணங்களொடும்
இணங்கி சிவலோகம் எய்துவரே"

இவை முதலானவை ஒவ்வொரு பதிகத்திலும் கூறியுள்ளார்.

இனி மாணிக்கவாசகப் பெருமான் அருளியுள்ள திருவாசகத்திற்குப்பாயிரம் கூறவந்த ஒரு அபியுக்தர் "தொல்லையிரும் பிறவி" என்ற பயன் கூறும் பாடலைக் கூறியிருக்கின்றார். ஆகவே திருமுறை வெளிவந்த நாள்களிலேயே பயன் கூறும் பகுதிகளும் வெளிவந்துவிட்டன எனலாம்.

6. கண்ணன் சொன்ன நன்மதி :— வடமொழியில் ஒரு சிறந்த நூல் பகவத்கீதையாகும். இதனை மிகச்

சிறந்த அறிஞர்கள் எடுத்து ஆண்டு இருக்கின்றார்கள். எல்லாச் சமயக் குரவர்களும் இந் நூலுக்குப் பேருரை எழுதியிருக்கின்றார்கள். உலகில் கணக்கற்ற மொழிகளில் இந் நூலை மொழி பெயர்த்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந் நூலின் அடிப்படைக் கொள்கை என்ன? யாதொரு பலனையும் கருதாது வினை செயல் வேண்டும் என்பதே அதன் அடிப்படைக் கொள்கை ஆகும். இதனை ஒரு சொற்றொடரில் கூறுவோமானால் ''நிஷ்காம்ய கர்மம்'' என்று கூறவேண்டும். இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு கண்ணன் 18 அதிகாரங்களில் இதை விரித்திருக்கிறான். அடிப்படை மிகச் சிறியது. விரிவுரை மிகப் பெரியது. இந்தப்படி பெரிய விரிவுரையில் அடிப்படைக் கொள்கை அமிழ்ந்துவிட்டது போலும். என்ன வியப்பு பாருங்கள்!

இந்தக் கொள்கையை உபதேசிக்க வந்த கீதைக்கு ஒரு அவியுக்தர் பலஸ்ருதி எழுதிவிட்டார் என்று முன்னமே கூறியிருக்கின்றோம். அதில் கீதையைப் படித்ததினால் பெறக்கூடியபலன்களைச் சவிஸ்தாரமாகக்கூறியிருக்கின்றார். அதைப் படித்தல்லவோ கீதையின் பெருமை கூறுகின்றவர்கள் காலக்ஷேபங்களாக விரித்துரைக்கிறார்கள். கண்ணன் கூறிய கொள்கை எங்கே? பின் பற்றுகிறவர்கள் செய்யும் செயலெங்கே? இதில் கருத்து வேற்றுமை தோன்றவில்லையா?

7. தமிழ் மூதாட்டியின் அறைகூவல் :— கண்ணன் 18 அதிகாரங்களில் கூறிய உபதேச மொழிகள் முழுவதையும் தமிழ் மூதாட்டி மூன்று சிறு சொற்களில் அடக்கி விட்டாள். ''வேண்டி வினை செய்யேல்'' என்பது அப் பெருமை பெற்ற வாக்கியம். இதனைத் தமிழ் மக்கள் நன்றாக அறிந்தால் வடமொழிப் புலவர்கள் கூறியுள்ள 'பயன் மொழிதல்' என்னும் கொள்கையில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். எந்த நல்ல செய்கை செய்தாலும் அதனை அச்செய்கைக்காகச் செய்யவேண்டுமே யன்றி, அச்செய்கையின் பயனைக் கருதி செய்யக் கூடாது. இது தமிழ் மக்கள் பண்டைக்கால முதல்கொண்ட அருமையான கொள்கை.

தான தர்மங்கள், கோயில் திருப்பணிகள் முதலிய அறச் செய்கைகளை இயற்றும் மக்களும் அவற்றின் சுவை

விரும்புதல் கூடாது. இவ்வாறே தமிழ் மகன் பண்டைய சங்க காலத்தில் எண்ணினான்.

ஆய் என்ற வள்ளல் பெருமகன்,

" இம்மைச் செய்ததுமறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன்,ஆய் அல்லன் "

என்று பண்டைய புறநானூற்றுச் செய்யுள் கூறுகின்றது. இதுதான் தமிழர் கோட்பாடு. இதனையே பொய்யடிமையில்லாப் புலவர்கள் போற்றினார்கள். ஆகவேதான் சங்க நூல்களில் பலன் சொல்லவில்லை போலும். பண்டைக் காலத் தமிழ் மக்கள் இவ்வாறான அரிய மேன்மை தங்கிய கொள்கைகளைக் கூறியிருப்பதை முன்னிட்டு இக்காலத்து மக்களும் ஏன் அவ் வுயரிய கொள்கைகளின்படி நடக்கக் கூடாதோ ?

---

2. தலப்பகுதி

திருவல்லம்

(கோவை கிழார்)

1. இடம் : இந்தத் தலம் இப்போது திருவலம் என்று வழங்குகிறது. அறக்கோணம்—காட்டுப்பாடி வழியில் ஒரு நிலையம். ஊரோ நிலையத்திலிருந்து வடகிழக்கே அரைகல்லில் உள்ளது. மேலும், சென்னை—சித்தூர் பெரும் பாதையிலும் உள்ளது. ஊர் பெரியது. இவ்வூரின் பெயர் தீக்காலி திருவல்லம் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

2. கோயில் : பொன்னை ஆற்றின் மேற்குக் கரையில் ஆற்றை அடுத்து இருக்கிறது. ஆற்றிற்கு ஓர் அழகிய பெரிய பாலம் இருக்கிறது. ஆற்றில் பெரும்பாலும் மணல் பரப்புத்தான் உண்டு. இவ்வாறு பாலாற்றின் ஒரு உபநதி. கோயில் பழையது. பல இடங்களில் பழுதுபட்டிருக்கிறது. பெரிய கோபுரம் தெற்கு நோக்கியிருக்கிறது. அதனுடைய இரண்டு உத்தரங்கள் வெடித்துள்ளன. அவ்வாறே அந்த வெடிப்பு அநேக காலமாக இருக்கின்றதாம். அவைகளைத் நீக்கி வேறு உத்தரங்கள் அமர்த்த மிகுந்த

செலவு பிடிக்குமாம். அவைகளின் அடியில் இரும்புத் தூலங்களைத் தாங்க வைப்பதே நல்லது என்று தோன்றுகிறது. கோயிலுக்கு முன்வாசலண்டை ஒரு சிறு தீர்த்தம் இருக்கின்றது. ஆனால் அதன் படிகள் இடிந்தும், எங்கும் புதர்கள் முளைத்தும் அசுத்தமாக இருக்கின்றன. தளவரிசைகளும் முரடாக இருக்கின்றன. பழுதுபார்க்கப்பட வேண்டும்.

3. மூர்த்திகள் : சுவாமி—வல்லநாதர். அம்மை—வல்லாம்பிகை. வடமொழியில் பில்வநாதர், பில்வாம்பிகை என்பார்கள். துவாரபாலகர்கள் இரண்டு வெவ்வேறு உருவங்கள். அவைகளை மாற்றி யிருக்கிறார்களோ என்று ஐயம். மகாமண்டபத்தில் உள்ள அறுபத்துமூவர் திருவுருவங்கள் வெகு சிறப்பான வேலைப்பாடுகள். சுவாமி சந்நிதியில் நந்தி, சுவாமியை நோக்காமல் நதியை நோக்கிக் கொண்டிருக்கிறது. விநாயகர் பெரிய உருவம். வடக்கு நோக்குகிறது. 100 க்கால் மண்டபத்தில் 100 கால்கள் இல்லை.

4. ஐதீகங்கள் : இதனை வில்வாரணியம் என்று வடமொழியில் கூறுவார்கள். தீக்காலி என்ற ஒரு அவுணன் இங்கே வழிபட்டதால் இதனைத் தீக்காலி வல்லம் என்று வழங்குவார்கள். இங்கே நவக்கிரகங்கள் வழிபட்டுப் பூசித்துப் பேறு பெற்றதாக ஐதிகம் உண்டு. விநாயகர் ஆற்றை நோக்கி யிருப்பதைக் குறித்து ஒரு கதை வழங்குகிறது.

5. நூல்கள் : சம்பந்தர் தேவாரப்பதிகம் ஒன்றுண்டு.

> " எரித்தவன் முப்புரம் எரியின் மூழ்கத்
> தரித்தவன் கங்கையைத் தாழ் சடைமேல்
> விரித்தவன் வேதங்கள் வேறு வேறு
> தெரித்தவன் உறைவிடந் திருவல்லமே "

இவ்வூருக்கு ஒரு சிறு வரலாற்று நூல் உண்டு.

6. அருகில் தலங்கள் : பண்டைய குடைக் குகைகள் அருகில் உண்டு. அவைகள் மகேந்திரவாடி முதலியவை. அவைகளில் பல்லவ அரசர்கள் குடைந்த குகைகள்

உண்டு. வள்ளியம்மை அவதரித்த வள்ளிமலை இங்கிருந்து 8 கல் அளவில் உண்டு. அம் மலையில் ஓர் இயற்கைக் குகை இருக்கிறது. இதில் வள்ளியம்மை, ஆறுமுகக் கடவுள் முதலிய திருவுருவங்கள் உள்ளன. அடிவாரத்தில் ஒருமடம் இருக்கிறது. திருப்புகழ் உண்டு.

7. கல்வெட்டுக்கள் : வல்லத்துக் கோயிலிலே 38 கல்வெட்டுக்கள் உண்டு. இதில் மிகப் பழைய சாசனங்களும் உண்டு. பல்லவ நந்தி விக்கிரமன் காலத்து, பாண விக்கிரமாதித்தியன் கங்க பிருதுவபதி முதலியோருடைய கல்வெட்டுக்கள் இருக்கின்றன. சோழர் காலத்துக் கல்வெட்டுக்களும் அவர்களுடைய குறுநில மன்னர்களான வைகும்பர், செங்கேணியர் என்ற வம்சத்தார்களின் கல்வெட்டுக்களும் இருக்கின்றன. இந்த இடத்தை ஜெயங்கொண்ட சோழமண்டலத்து (தொண்டை) படுவூர் கோட்டத்து பெரும்பாணப்பாடியில் மீயரைநாடு என்ற கரை வழி நாட்டில் உள்ள தீக்காலிவல்லம் என்ற வாணபுரம் என்று கூறுகின்றன. இதனால் இந் நாட்டின் பண்டைய பிரிவுகள் தெரிகின்றன. இவ்வூருக்கு ஒருகல் தூரத்தில் உள்ள ஒரு பாறையில் தமிழிலும், கிரந்தத்திலுமாக ஒரு பல்லவ கல் வெட்டு இருக்கிறது. அது நந்தி விக்கிரமவர்மன் (757 - 779) காலத்தது. அதன்படி ஒரு கம்மாளன் வாணபுரம் கோயிலுக்கு ஒரு நிலத்தைத் தந்தான். அதனை மகாபலி வாணராயன் ஊர்ச்சிதப் படுத்தினான். வாண வித்தியாதர ராயன் என்ற வாணராயன் கல் வெட்டில் பிருதுவிபதி I மகள் திருவலம் கோயிலுக்கு விளக்குக்காக, நாள் ஒன்றுக்கு ஒரு உரி நெய் தருமம் செய்தாளாம். மற்றொரு கல்வெட்டில் அரசியின் பெயர் குந்தவ்வை என்று கண்டிருக்கிறது. இராசேந்திரச் சோழன் காலத்தில் அரசனுடைய உத்தியோகஸ்தன் ஐயாயிரவன் பல்லவரையன் என்றவன் இராஜராஜேஸ்வரம் என்ற ஒரு கோயிலைக் கட்டி, 2000 குழி நிலமும் தந்தான். குலோத்துங்கன் III நாளில் வடகண்டம், கழுகடி, தளிவரி, குற்ற தண்டம் இவைகள் தீக்காலி வல்லக் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன. அமராபரண சீய கங்கனுடைய அரசி அரியபிள்ளை என்பவள் இரண்டு விளக்குத் தானம் செய்தாள். சீயகங்கன் நன்னூல் இயற்றிய பவணந்தியின் போஷகன்.

கோவிஜய நந்திவிக்ரம வர்மனுடைய 17-ம் ஆண்டில் பாணவரசன் விக்கிரமாதித்தியன் I ஆணையின் பேரில் விடேல் விடுகு காடு வெட்டி தமிழ்ப் பேரரையன் என்பவன். விடேல் விடு விக்கிரமாதித்தன் சதுர்வேதி மங்கலம் என்ற பேருள்ள மூன்று ஊர்களைத் தானம் செய்தான். இக் கல் வெட்டில்தான் முதன் முதலாகத் திருப்பதியம் என்ற பெயர் குறிக்கப் பட்டுள்ளது.

ஒருவன் வள்ளிப்பேடு கிராமத்தார்க்கு 25 கழஞ்சுப் பொன் கொடுத்தான் (ஒரு விளக்கிற்காக). சகம் 1236-ல் ஞானமூர்த்தி என்றவன் ஒரு மண்டபம் கட்டினான்.

(வடமொழி சுலோகங்கள்) குலோத்துங்கன் காலத்தில் பழங்குன்ற கோட்டத்துச் செங்குன்ற நாட்டுக் கலவையூரான் ஒரு விளக்கு வைத்தான்.

கி. பி. 991—கல்வெட்டின்படி மதுராந்தகக் கண்டராதித்தனுர் கோயிலுக்கு விஜயம் செய்து 1000 குடம் அபிஷேகம் செய்து கோயில் கணக்குகளைப் பரிசிலனை செய்தார்.

இவைகளே தவிர வைகும்பர், வாணர் முதலிய வம்சத்தார்களின் பல தான தருமங்கள் கூறப்பட்டுள்ளன. ஆகவே இந்தத் தலம் மிகப் பழமையும் புகழும் பெற்ற தென்க.

———

3. சாத்திரப் பகுதி

சிவஞான போத வெண்பாப் பொருள்

(சித்தாந்த ரத்நாகரம். முந்து. சு. மாணிக்கவாசக முதலியார்)

சிவஞான போதத்திலுள்ள வெண்பாக்களின் பொருள், அதன் சூத்திரம், வார்த்திகப் பொழிப்பு, சிவஞான சித்தியார், சூர்ணிக் கொத்து முதலியவற்றின் துணைக்கொண் டுணர்வார்க்கு இனிது விளங்கும். ஆசிரியர் மாதவச் சிவஞானயோகிகள் அருளியவுரை அத்தகு நெறியிலெழுதப் பெற்றனவேயாயினும், சில இடங்களில், தக்க காரணங்கொண்டு, கற்பார்க்கு வாயுரையாகத் தோன்றுதவாறு வலிந்து பொருள்கொண்டது போலத் தோன்றும். அங்கெல்லாம் நம் சிற்றறிவு கொண்டு ஒரு முடிபு செய்து, அவருரையைப் போற்றுதொழிதல் எற்றேனும்

சரியன்று. அவ்வெண்பாக்களுக்கு அவர்க்கு முன்னிருந்தாரும் பின்வந்தாரும் எழுதியுள்ள வுரைகளிற் சிற்சில இடங்களுள் மாறுபாடும் வேறுபாடும் பொருந்தாமையும் வேறு குற்றங்களும் தோன்றுகின்றன. அவற்றைப் பொருளாகக் கொள்வாரும் இலர். அதனால், அம் முனிவர் பிரானுரையே ஆட்சியிலிருந்து நம்மை உய்விக்கின்றது. இங்கு அடியேனும் ஒரு வெண்பாவின் பொருளைப் பற்றி எழுதத் துணிந்தேன். இத் துணிவும் அப் பெருமானருளிய உரைகளைக் கற்றுணர் வன்மையாலன்றி வந்ததன்று. அவருரையை இது மறுப்பது மன்று.

சிவஞானபோதத்தின் முதற் சூத்திரத்து மூன்றுவது அதிகரணத்திலுள்ளது அவ் வெண்பா. அஃதாவது :—

"ஒன்றலா வொன்றால் உளதாகி நின்றவா
றொன்றலா வொன்றில் அவைஈறு தல்—ஒன்றலா
ஈறேமுதல் அதனின் ஈறலா வொன்றுபல
வாறே தொழும்பாகும் அங்கு"

என்பது. இதற்கு அம் முனிவர் அருளிய வுரையாவது :

"என்பது உதாரணம் என்னுதலிற்றோ எனின், அங்ஙன மாயினுஞ் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் பலவாயினாற் போலச் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமும் பலவுள எனக் கோடும் ஒன்றே என்றற்குப் பிரமாணம் என்னை என்னுங் கடாவை ஆசங்கித்து, ஏதுவை வலியுறுத்துதல் நுதலிற்று. இதன் பொருள்,

அவை - சேதனப் பிரபஞ்சத் தொகுதி, ஒன்று அலா ஒன்றால் - உருவும் அருவும் என்னும் அவ்விரு கூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத ஒப்பற்ற பரம் பொருளாலே, உளது ஆகி நின்றவாறு - சிருட்டிப் பட்டுத் திதிப்பட்டவாறே, ஒன்று அலா ஒன்றில் ஈறுதல் - அந்தப் பரம் பொருளின் கண்ணே சங்காரப் படுதலால், ஒன்று அலா ஈறே முதல் - அச்சங்காரக் கடவுளொருவனே உலகிற்கு முதற் கடவுள், அற்றேல், இவ்வாறு முத்தொழிற்படுஞ் சேதனப் பிரபஞ்சம் வீடுபெற்ற வழிச் சுட்டுணர் வின்றிச் சிவ சமமாம் என வேதத்தும் ஆகமத்தும் ஓதுதலின் அவ் வழி அவையும் முதற்கடவுளாம் என்றற்கு இழுக்கென்னை யெனின், அதனின் ஈறு அலா ஒன்று - அப் பரம்

பொருள்போல் அறிவின்றி நித்தமாய சேதனப் பிரபஞ்சம், அங்கு - வீடுபேற்றின் கண்ணும், பலவாறே தொழும்பு ஆகும் - பலவாற்றானும் பரம் பொருளுக்காக அடிமையாம்'' எ-று.

இவ் வுரையுள் ஈண்டு உளங்கொளற்பாலன இவை :-

1. ஒன்று அலா ஒன்று - உரு அரு என்னும் இரு கூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல்லா ஒப்பற்ற பரம் பொருள்.

2. ஒன்று அலா ஈறு - அச் சங்காரக் கடவுள்.

3. ஈறலா ஒன்று - அறிவின்றி நித்தமாய சேதனப் பிரபஞ்சம்.

இவ் வுரையின் பொருத்தத்தை முதற் சூத்திர வுரை முழுதும் முறையே கற்றுணர்ந்தாலன்றி உணர்தலரிது. மிகச் சிறந்த உரை யென்பதை எவரும் மறுத்தற்கியலாது. அடியேன் கருதிய வுரையோ இவ்வுரையின் வேறு படினும் மாறுபடாது. அவ்வேறுபாடு முனிவருரைக்குள்ள பொருத்தம் வாய்க்கப் பெருமையாற் கொள்ளத் தக்கதென்று அறிஞர் தள்ளினும் தள்ளுக. கொள்ளினுங் கொள்ளுக. அடியேனுக்குத் தோன்றிய வுரையும் உலகில் வெளிப்படுதலாற் கேடொன்று மின்று என்ற நினைவே மீண்டும் மீண்டும் எழுதத் தூண்டியதால் எழுதலானேன்.

என் கருத்தை வெளியிடுமுன் இங்குச் சிற்சில குறித்தல் இன்றியமையாததாயுள்ளது.

1. இவ் வெண்பாவின் முன்னர், மேற்கோளும் ஏதுவுமா யுள்ளவை முறையே, 'இனி, சங்காரமே முதலென்றது' 'சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்தரமின்றி நிற்றலான்' என்று வருவன. இதில் 'சுட்டுணர்வாகிய பிரபஞ்சம்,' 'சுட்டுணர்வின்றி நின்ற சங்காரம்' என்ற தொடர்களை மறத்தல் கூடாது.

2. 'அவன் அவள் அது எனும் அவை' என்ற முதற் சூத்திரப் பகுதிக்குரிய மேற்கோள் 'ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம்' என்பது. இதில், சுட்டுச் சொற்கட்கு ஒருமை யெண்ணினடியாகித் தோன்றிய சொற்கள் பொருளா யமைந்தன என்பதும், ஒன்று, ஒருத்தி, ஒருவன் எனச் சுட்டுதல் மெய்கண்ட தேவர்க்

குடன்பாடு என்பதும் அவை என்றதன் பொருளும் நினைவில் வைத்தற்குரியன.

3. இரண்டாவது சூத்திரத்து முதலதிகரணத்தினோது, 'அத்துவிதமென்ற சொல்லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவது உண்மையின், அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை (அநந்நியத்தை) உணர்த்துமாயிட்டு' என்றுளது. இதில், 'ஏகம் என்று சுட்டுவது' என்றதைச் சோரவிடலாகாது.

4. 'அது என்னும் ஒன்றன்று' (சூ. 6. வெ. 6)

இதில் 'ஒன்று' என்றதன் பொருளை அறிக. 'ஒன்றெனுமதனால் ஒன்றென்றுரைப்பதுண்டு' (சித்தியார். 248)

5. 'ஒன்று என்ற நீ' (சூ. 2. வெ. 2.)

6. 'அவன் அவள் அது' என்னும் முதனூற்பகுதிக்கு வழிநூலாகிய சிவஞான சித்தியாருள், ஒருவனோடொருத்தி யொன்று' என்றுரைத்த வாற்றை யுணர்க.

7. ஒன்று, ஒருவன், ஒருத்தி என்னும் பெயராட்சியின்பொழுது சுட்டுவிரலைக் காட்டுதல் இன்றும் வழக்கிலுண்மையை எண்ணிப் பார்க்க.

இவற்றை நோக்கின், ஒன்று என்னும் பெயர்க்குச் சுட்டுணர்வு என்னும் பொருள் கோடல் பொருந்துமென்று தோன்றலாம்.

1. 'சுட்டுண்ர்வாகிய பிரபஞ்சம்'

2. 'சுட்டுணர்வின்றி நின்ற சங்காரம்' என்ற இரண்டனையும் இவ்வெண்பாவிற் குறித்தல் எல்லோர்க்கும் உடன்பாடே.

'ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம்' என்றதில், ஒருவன் ஒருத்தி என்ற இரண்டும் சுட்டுணர்வாகிய (சேதநப்) பிரபஞ்சம். ஏனையது சுட்டப்பட்ட (அசேதநப்) பிரபஞ்சம்.

இவ்வெண்பாவில் வரும் பெயர்ப் பொருள் :—

1. ஒன்றலா வொன்று (சுட்டுணர்வின்றி நின்ற தனி முதல்வன்).

2. ஒன்றலா வீறு (சுட்டுணர்வின்றி நின்ற சங்கார கருத்தா).

3. ஈறலா வொன்று (சங்கார கருத்தா வல்லாத சுட்டுணர்வாகிய பசு).

ஈண்டு, எண்ணிட்டும் இருதலைப் பிறையிட்டுங் குறித்த வாறு கொண்ட உரையாவது :—

'ஒன்றலா வொன்றால் - சுட்டுணர்வின்றி நின்ற தனி முதல்வனால்,

உளதாகி நின்றவாறு - தோற்றப்பட்டும் காக்கப்பட்டும் நின்றவாறு,

ஒன்றலா வொன்றில் - அத்தனி முதல்வன்கண்,

அவை - சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் (சேதநப் பிரபஞ்சம்),

ஈறு ஆதல் - ஒடுக்கம் அடைதலால், சங்காரப் படுதலால் சங்காரமாதலால்) [இது பாசத்திற் குண்டாகும் அழி வன்று. ' அழிப்பு இளைப்பாற்றல் ' என்பதறிக].

ஒன்றலா வீறே - சுட்டுணர்வின்றி நின்ற சங்கார கருத் தாவே,

முதல் - உலகிற்கு முதற்கடவுள். (பதி பசு பாசம் என் னும் முப்பொருளுள், பாசம் காரண ரூபமாய் அழி வது. பசுபதியின்கண் சங்காரப் பட்டிளைப்பாறுவது. பதியே முதற்கடவுள் என்பது பாரிசேட அளவையாற் பெறப்பட்டது),

அதனின் - அம்முதற் கடவுளிடத்தில், (அதைப்போல என லும் ஆம்),

ஈறலாவொன்று - அச்சங்கார கருத்தா அல்லாத சுட்டுணர் வாகிய பிரபஞ்சம்.

அங்கு - வீடுபேற்றிலும்,

பலவாறே தொழும்பாகும் - பலவாற்றானும் அத்தனி முதல் வனுக்கு அடிமையாகும். (' அவையுடைமை ஆளாம் நாம் அங்கு '

என்பது.

ஒன்று - சுட்டுணர்வு, ஒன்றலா வொன்று - சுட்டுணர் வல்லாத ஒப்பற்ற சிவன், ஈறு - ஈற்றிற்குரிய பிரபஞ் சத்தை ஈறுறுத்துவன். ஈறலாவொன்று - சங்காரம் புரியும் இறைவனல்லாத பசு எனலுமாம். முற் கூறியவாறு சங்கார கருத்தா வல்லாத சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் எனக்கொள்வதும், அதற்கேற்ப உரைப்பதும் பொருந் தும். தொழும்பாதல் - சங்காரத்தின் வழிநிற்றல் அல்லது சுதந்திரமாய் நில்லாமை.

சமய வாழ்வில் செல்வர்கள்

(அ. தா. ப. திருஞானசம்பந்தன்)

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர், செல்வரை யாவரும் செய்வர் சிறப்பு" என வள்ளுவப் பெருந்தகையார் செல்வம் பெற்றோரின் சிறப்பினைப் பற்றிப் பேசுகிறார். உலகில் நன்றாக வாழ்க்கையின் சுகங்களைப் பெற்று வாழப் பொருட் செல்வம் மிகவும் வேண்டற்பாலது. இளமைக் காலந் தொட்டே, ஊக்கத்துடன் முயற்சியை நல்கிப் பொருள் ஈட்டவேண்டும் எனவும், முப்பதாம் ஆண்டளவில் ஒருவன் வாழ்தற் குரியத் திட்டமான செல்வத்தைத் தேடிச் சேமித்தல் வேண்டும் என நீதிநூல்கள் சிறந்த கருத்துக்களைக் கூறுகின்றன. அதிகம் வலியுறுத்தி, செல்வத்தாற் பெறும் பயனை அறிய வேண்டுமெனின் ஔவைப் பிராட்டியிடம் அல்லவா செல்லவேண்டும். தமிழ்ப் பாட்டி என்ன கூறுகிறாள்? 'திரைகடலோடியும் திரவியம் தேடு' எனவும், 'தேடா தொழுகின் பாடாய் முடியும்' என்றன்றோ வற்புறுத்திக் கூறுகிறாள். இன்னோரன்ன உலகிற் தோன்றிப் பேரிலக்கியங்கள் சமைத்த பல்லோரும் செல்வம் வாழ்விற்கு இன்றியமையாதது என்றே பசுமரத் தாணியென அறைந்தும், கூறியும், எழுதியும் வந்தனர்; இன்றும் பலர் வற்புறுத்திக் கூறுவதையும் காண்கிறோம் அல்லமோ?

பெரு நாவலர் வள்ளுவரும், செல்வத்தின் பயன் எத் தன்மைத்து என்று கூறச் சளைத்தாரில்லை. பெருமைகளை எடுத்து விளம்புவதோடு நின்றாரில்லை. அதைப் பெறுதற் குரிய வழிகளையெல்லாம் தெள்ளத் தெளிவாக வகுத்துக் காட்டியும் உள்ளார். அறம், பொருள், இன்பம் பற்றிப் பாட்டிசைக்க வந்த பெரியார் அறத்தை 38 அதிகாரங்களாலும், பொருளை 70 அதிகாரங்களாலும், இன்பத்தை 25 அதிகாரங்களாலும் பாடியிருப்பதினின்றும், பொருளுக்கு எவ்வளவு உயர்வு அளித்திருக்கிறார் என்பதை எண்ணுங்கால், இன்பம் அல்லவோ மேலிடுகிறது. குறளுக்குப் பின் தோன்றிய நாலடியார் வள்ளுவர் வகுத்துரைத்தப் பால் முறைக்கு அரண் செய்வதைக் காண்க.

" வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும் "
(அதி. 12. மெய்ம்மை - 4)

உலகில் அவமதிப்பாகிய குற்றம் இல்லாளுகி நிலை பெறும்படி, அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பொருளில் அவற்றின் இடையில் நின்றதாகிய பொருளை ஒருவன் அடைய அப் பொருளுக்கு முன்னும், பின்னும் நின்ற அறத்தையும், இன்பத்தையும் அதன் காரணமாக அடைவான் என்பது கருத்து.

செல்வம் இன்றி வாழும் பேதை மகனைத் தாயும் விரும்பாள் ; கொண்ட மனைவியும் திரும்பிப் பாராள் ; மோழையும் அவனைக் காணின் பாயும் என்றெல்லாம் நூல்கள் அறைவதைக் காண்கிறோம். இக் கருத்தைப் பட்டினத்தடிகள் பேசுவது பெருமித நீர்மையது.

தாயும்பகை ; கொண்டபெண்டிர் பெரும்பகை ; தன்னுடைய
சேயும் பகை யுறவோரும்பகை ; யிச்செகமும் பகை ;
ஆயும் பொழுதி லருஞ்செல்வ நீங்கிலிங் காதலினுற்
ருேயு நெஞ்சே! மருநீசர் பொற்பாதஞ் சுதந்திரமே.

(கருத்து) என்னோடு ஒற்றுமையாகப் பொருந்திய மனமே! இவ்வுலகத்தில் அருமையாகிய செல்வம் நீங்கிவிட்டால், பெற்ற தாயும் பகையாவள் ; கொண்ட மனைவியும் பெரும் பகையாவள்; தன்னுடைய பிள்ளையும் பகையாவன்; சுற்றத்தாரும் பகையாவர் ; இவ்வுலகமும் பகையாகும் என்றே கூறுகிறார் வெண்காடர்.

மேற் கூறிய வெல்லாம் நூல் அளவோடு நிற்கவில்லை. கண்கூடாகவுங் காண்கிறோம். இது அவல நிலையாகத் தான் உள்ளது ; உடனடியாக ஆவன செய்து, அதனைப் போக்க முற்பட வேண்டியதும் அறிஞர் கடனே! ஆக்கத் தொழிலில் அனைவரையும் ஈடுபடச் செய்து, நல்ல ஊதியம் பெற்று வாழவேண்டும் என்று விடிந்தது முதல் சாயுங் காலம் வரை பேசப்படுகிறது. எண்ணற்ற சட்டங்கள் சடுதியில் இயற்ற வேண்டித் திரமான திட்டங்கள் தீட்ட முற்படுகின்றனர். இவை அனைத்தும் எவ்வளவில் பயன் அளிக்கும் என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து ஆராய வேண்டியதும் அறிஞர் கடனே! அல்லது "சொல்லுதல்

யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" என்ற திருவள்ளுவர் அறிவுறுத்தலுக்கு எடுத்துக் காட்டாய்ப் பலதிறப்பட்ட பண்பிலாச் சட்டங்கள் இயற்றுவோர் சிற்பரோ என்று ஐயப்படவேண்டியுள்ளது. நிற்க.

பெருநாவலரின் கருத்துகள், நாம் எழுப்பும் பல ஐயங்களுக்கும், விடைதந்து வாழ வைக்கும் என்று கூறுவது எல்லா வகையிலும் பொருந்தும் எனலாம். அவர் செல்வம் பற்றிப் பேச வரும்பொழுதெல்லாம், மிக்க மரியாதை கொடுத்தே பேசுவதைக் காணலாம். பொருட்பாலுக்கு, அதிக அதிகாரங்கள் ஒதுக்கி யிருப்பதினின்றும் அவர் பொருளுக்குக் கொடுக்கும் மரியாதையை நன்குணரலாம். செல்வத்திற்கு உயர்வு கொடுக்கும் வள்ளுவர் அதனைப் பெற்ற எல்லா செல்வர்களுக்கும் உயர்வு அளிக்கிறார் இல்லை. அஃதன்றோ சிந்திக்கத் தக்கது. கண்ணோட்டமில்லாத—தாக்ஷண்யம்—செல்வர்கள், பண்பே அற்று வாழும் செல்வர்கள் இவர்களை எல்லாம் செல்வர்கள் என்றே பெருநாவலர் ஒத்துக் கொள்வதில்லை. இவர்களை ஓரறிவுள்ள மரத்திற்கே ஒப்புமைப் படுத்துகிறார்; அங்ஙனம் மதிக்கவும் செய்கிறார்.

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்து கண்ணோடா தவர். (அதி - 58. குறள் 6)

அரம் போலுங் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லா தவர். (அதி - 100. குறள் 7)

பண்பு இன்றி வாழும் செல்வனைப் பற்றிப் பேசவரும் வள்ளுவர் "நற்குணமில்லாதவன் முன்னைத் தவப்பயனால் பெற்ற பெருஞ் செல்வம் ஒருவர்க்குப் பயன்படாமற் போதல் எதுபோல என்றால், நல்ல பசுவின் பாலானது தன்னை ஏற்றதற்கு உரியதல்லாத பாத்திரத்தின் குற்றத்தாற் சுவை கெட்டுப்போதல் போலும் என்பதாம். ஆக பெருஞ்செல்வம் பெற்றவனுக்கு நற்குணம் அவசியம் வேண்டும். நற்குணம் என்பதோ ஈதல் இசைபட வாழ்தல் என்பதாம்.

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.
(அதி-100. குறள் 10. பண்புடைமை)

இங்ஙனே, ஈந்து உவக்கத் தெரியாது பெருநிதி ஈட்டி வாழும் செல்வனை வள்ளுவர் பெருந்தகையார் என்றென்றும் விரும்புவதில்லை. நற்செல்வம் பெறுவதால் பெறும் பயன் நலனுடைத் தென்பதைப் பலவிடங்களில் தம் குறட்பாக்களில் பேராசிரியர் அழகாகப் பேசுகிறார்.

இதுவரை வள்ளுவப் பெருந்தகையார், செல்வத்திற் களிக்கும் சொலற்கரிய சிறப்பையும், பண்புள்ள செல்வர்களைப் பற்றிப் பலபட பாராட்டும் நிலையையும் அறிந்தோம். இனி சமயவாழ்வில் இருந்து நாளும்—அவம் பெருக்கி வாழும் செல்வர்கள்—ஆனால் சிவம்பேணி வாழ்வதாக என்னுகிறவர்களைப் பற்றிச் சிந்தித்தல் இது போழ்து மிகவும் வேண்டற்பாலது.

நம் சமயமாம் சைவம் என்றென்றும், மாடி வீட்டுச் செல்வச் சீமான்களால் வளர்க்கப் பட்டதல்ல; வளர்க்கப் படப் போவதும் இல்லை. பின் சமயம் யாரால் வளர்க்கப் பெற்றது? நாளும் நல்குரவை நவமணி மாலையாக அணிந்து, அழிக்க முடியாத அல்லலில் துயரப்பட்டு, அவன் திருப்பணியே பெரும் பணி என்றெண்ணி, துன்பத்தில் இன்பங் கண்டு வாழ்ந்த அனுபூதி பெற்ற பெரும் புலமை உடைய செல்வர்களால் வளர்க்கப் பட்டது என்பது வெள்ளிடைமலை. சமய வாழ்வில் சிறந்தோங்கும் செல்வர்கள் தங்கள் சுகபோக வாழ்நிலையை ஒரு பொருட்டாக அமைத்து, ஏனையோரையும் எடை போட முயல்கின்றனர். இது தகுதியாமோ? சமயத்தில் வாழும் செல்வர்கள் சுற்றுப் புறத்தைச் சூழ நோக்கவேண்டும். எவ்வளவு மக்கள் பட்டினிப் பஞ்சத்தால் வாடுகிறார்கள் என்பதைக் கண்டு, மனமிரங்கி, அதற்கு ஆவன செய்ய முயலவேண்டும். இறைவன் திருக்கோயில்களில் மட்டும் தானா எழுந்தருளியுள்ளார்? அவர் நடமாடும் கோயிலில்—உள்ளத்தில்—வீற்றிருக்க வில்லையா? இதற்குத் திருமூலர் அறிவுரை தந்து நியாயத்தை நடுநிலை பிறழாது எடுத்துக் கூறுகிறாரே! அதைக் காண்மின்!

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க் கொன்றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே. —திருமூலர்

செல்வர்களில் பல்லோரும், வயிறு புடைக்க உண்டு, பஞ்சு மெத்தையிலே பரவசமாய்ப் படுத்துறங்குவதைப் போலவே, நாட்டில் எல்லா மக்களும் வாழ்கிறார்கள் என்கிற குருட்டு நம்பிக்கையிலே நலமாக வளர்ந்துள்ளார்கள். இது வாழும் வாழ்க்கையாகுமா என்ன? ஆகவே ஆகாது! சென்ற சில வாரங்களுக்குமுன், வடார்க்காடு மாவட்டத்துச் சில பகுதிகளும், ஆந்திர நாட்டில் சில பகுதிகளும், பட்டினிப் பஞ்சத்திற்கு உள்ளாயின. காட்சிகளைக் கண்ணெதிரில் காணக் கோரமாயும் இருந்தது. புரண்ட தலை; குழிந்தாழ்ந்த கண்கள்; சூம்பிய கால்கள்; வற்றிய வயிறு; வீங்கிய உதடுகள்; கரை ஏறிய பற்கள்; எடுத்தால் உடையுமோ என்றெண்ணும்படியான கைகள். இந்த நிலையில் பல உருவங்கள் காட்சி தந்தன. பல இறைவன் இன்னருட்பேற்றிற்கு இலக்காகி தெருப்புறங்களிலே மண்ணோடு மண்ணாய்க் கிடந்தன. இவை அனைத்தும் பட்டினிப் பஞ்சத்தால் மக்கள் பாழ்பட்டதற்கு எடுத்துக்காட்டு.

சமயத்தில் வாழும் செல்வர்கள், இந் நிலையைக் கண்ணுற்று, ஆவன செய்தால் நீதிக்கு முரணாகுமா? அன்றி நேர்மைதான் ஆகாதா? அன்றி இறைவன் அங்ஙனம் செய்ய முற்பட்டவர்களுக்கு அருள் பாலிக்கத் தயங்குவாரா என்ன? சமய வாழ்வில் செல்வம் படைத்த சீமான்களிற் பலர் இன்று சமயத்திற்குப் பணிபுரிய முன் நிற்கின்றனர். இது வரவேற்க வேண்டிய ஒரு செய்திதான். பணியானது, பேச்சளவில், மேடையில் செய்கின்ற முழக்கத்தளவில், நின்றால் போதுமா? சொல்லிய பலவுள் ஒருசிலவற்றையாவது செயலிற் காட்டினால் அன்றோ, அன்னார் சொற்கள் சிறப்படையும்; அதன் வழித்தாய் அவர்கள் பல பேறுகள், பொதுமக்களாற் பெறுவர். அங்ஙனமலாது, சொல்லளவாலும், பேச்சளவாலும், எண்ணத்தளவாலும் சமயம் செழித்தோங்கி வளரும் என்றெண்ணுவது தகுதியல்ல. அவைகளெல்லாம் சாதாரண மக்கள் சமயம் பற்றிய ஒரு சில கருத்துக்களை அறிந்துகொள்ள ஒரு சிறு சாதனமே ஒழிய வேறல்ல. சொல்லியவற்றைச் செயலால் மக்களுடன் மக்களாய் ஒன்றிப் பழகி நடைமுறையில் நடத்திக் காட்டுபவர்களால் தான் நம் சமயமாம் சைவம் வளர்கிறதெனின் பொருந்தும். ஆக இறைவன் அருள்பெற்று

இனிதே அவன் தாள்களை அடைய விழையும் சமயச் செல்வர்கள், தரித்திரத்தால் தலை தடுமாறி நிற்கும் உருவங்களுக்கு, நற்பணி செய்ய முந்தினால் அவ்விடமே, எளிய மக்களின் சமயப் பற்றைத் தூண்டும் முதலிடம் எனலாம். அங்ஙனம் அவர்கள் செய்யவில்லை என்றால் சமயம் நலிந்து நசுங்கியும் விடாது. சமயத்தில் வாழும் பாமர மக்களுக்குச் சமயம் எனின் வெறுப்புத் தட்டும். "செல்வத்தின் பயனே ஈதல்" என்ற புறப்பாட்டின் பொருளுரைக் கேற்பச் சமயச் செல்வர்கள் ஈந்து வாழ அறிதல் வேண்டும். இங்ஙனம் வாழத் தெரியாதவர்களை ஒரு முற்றுந் துறந்த முழு ஞானி, வெகு கேவலமாக, குறைத்து, இகழ்ச்சி செய்து பேசுகிறார். அத்தகைய அன்பர் யார்? அவர்தான் பட்டினத் தடிகள். அவர் என்ன கூறுகிறார்?

காயா மரமும் வறளாங் குளமுங் கல்லாவு மென்ன
ஈயா மனிதரை யேன்படைத்தாய்! கச்சியே கம்பனே!

இறைவனிடம் அடிகள் விண்ணப்பம் போடுகிறார். என்ன விண்ணப்பம் போடுகிறார்? அம்பலவா? காய்க்காத மரமும், தண்ணீரில்லாத குளமும், கல்லால் செய்யப் பெற்ற பசுவுமன்ன மக்கட்குப் பயன்படாத, ஈயாத செல்வர்களை என் படைத்தாய் என்றல்லவா இறைவனைத் தன் விண்ணப்பத்தில் வினவுகிறார்.

நுண்மாணுழை புலமைகொண்ட, அனுபூதி பெற்ற செல்வர்கள், பொருட் செல்வத்தை ஒரு பொருட்டாக மதித்தார்களில்லை. அவர்கள் உலக வாழ்வை நீத்தவர்களாதலால் உலகிடை இன்று வாழும் அனைய மக்களும் அத்தகு நிலைக்கு உடனடியாகச் செல்லவியலாது; பக்குவம் பெற வேண்டும் என்ற காரணம்பற்றியும், மக்கள் உலக நலன்கள் துய்த்தற்குப் பொருட்செல்வம்வேண்டற்பாலது என்ற மூத்தோரின் தெளிவுரை நியாயம் பற்றியும், அதனை ஏற்று "மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்ற பேராசிரியர் பெருவாக்கிற் கேற்ப ஈந்து வாழவும் அறிதல் அசிவயம். இன்றேல் எத்துணைப் பெருவாழ்வு வாழ்ந்தாலும், அஃது வாழ்வாகாது; வீழ்வேயாகு மென்க! இனி நாம் சமயத் துறையில் வாழ்ந்த ஞானச் செல்வர்கள் போற்றிய செல்வத்தின் தன்மை என்ன என்பதைப் பற்றி ஆராய்வோம்.

உலகப் பற்றில் உறழ்ந்து நிற்கும் நாமெல்லாம், மணி, பொன், வைடூரியம். கோமேதகம் போன்றவைகளையே செல்வமே என்று இடையறுது போற்றுகிறேம் ; அதனேடன்றி அவைகள், நாளும் வளர்ந்தோங்கிப் பெருநிதியமாக வேண்டி, வந்தனை வழிபாடும் இயற்றுகிறேம். ஞானச் செல்வர்கள் எதைச் செல்வமெனப் போற்றினர்கள் தெரியுமா ? சிவபெருமானை, செம்பொனம்பலவனை அல்லவா ? அரும்பொனே ! மணியே ! என் அன்பே ! என் செல்வமே ! என்று போற்றினர்கள்.

செல்வமே சிவபெருமானே ! —திருவாசகம்
செல்வன் தேவியொடுந் திகழ்கோயிலே —அப்பர் தேவாரம்

திருவும் மெய்ப்பொருளும், செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்களென் றெண்ணி.—சுந்தரர் தேவாரம்

அரும்பொனே ! மணியே ! என் அன்பே !
என் அன்பான அறிவே —தாயுமானுர்

மேற்கண்ட பெருமக்களைப் போல, ஏனைய ஞான முது பெருஞ் செல்வர்களும், பக்தி வலையிற் படுவோனுகிய இறைவனைச் செல்வமே என ஏற்றிப் போற்றினர். ஞானச் செல்வர்கள் பொருட் செல்வத்தை எங்ஙனம் மதித்தார்கள் தெரியுமா ? வெகு துச்சமாக மதித்தனர். அரிமர்த்தன பாண்டியன் அவைக்களத்திலே அமைச்சர் பதவி அளிக்கப் பெற்று அரும் பெரும் சீலரென மதிக்கப் பெற்ற மணிவாசகர் பெருமான், செல்வத்தின் சூழலிலேயே இடையறுது வாழ்ந்தவர். மற்றைய பெருமக்கள் செல்வம் பற்றிப் பேசுவதைக் காட்டிலும், அடிகளார்க்கே மிகுதியும் பேசவும், கூறவும் உரிமை உண்டு. காரணம் அதன் தன்மையை நன்கு பாகுபாடு செய்து உணர்ந்தவர் என்பது தான். அவர் செல்வம் பற்றிக் கூறுவதைக் காண்க :—

"செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்"
—போற்றித் திருவகவல்

"பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்"
"வைத்தநிதிப் பெண்டீர் மக்கள் குலங்கல்வி யென்னும்"
—திருக்கோத்தும்பி

"வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்"
—உயிருண்ணிப்பத்து

தாயுமானாரும், பட்டினத்தடிகளும் மேற்கண்ட கருத்திற்கு அரண் செய்வதைக் காண்க:—

எறிதிரைக்கடல் நிகர்த்த செல்வமிக அல்லல் —தாயுமானர்

"பொன்னை நினைந்து வெருவாகத் தேடுவர்"

"பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை ; பிறந்து மண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவ தில்லை; யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக்கறியா
திறக்குங்குலா மருக்கென் சொல்லுகேன் கச்சி யேகம்பனே
—பட்டினத்தடிகள்

இங்ஙனே அநுபூதி பெற்ற செல்வர்கள் அனைவருமே, பொருட் செல்வத்தை அழிதற்குரியதை மதியாமல் இகழ்ந்தே பேசிச்செல்வர். கடந்த நிலையில் உள்ளவர்களுக்குப்பெரும் பொருளாய் இறைவன் ஒருவனேதோன்று வன். அழிதன் மாலையதான, மற்றெல்லா மயக்குப் பொருளெனவே அவர்கள் அறவே நீக்கி வாழ்ந்தனர். உலகிடை ஏனைய மக்கள் வாழ்வதைப்போல அனுபூதி பெற்ற அருளுடை மக்கள் வாழ்ந்திருந்தும் அவர்களெல்லாம், சிந்தையால் சிறந்து, எண்ணத்தால் உயர்ந்து, செயலால் மிகுந்து நலனுற வாழ்ந்தனர். அன்றியும் வள்ளுவர் கூறியாங்கு பற்றி வாழ்ந்தனர்.

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு. (அதி. 36, குறள். 1)

(கருத்து) பொய்ப் பொருள்களை மெய்ப்பொருளென்று அறியும் மயக்க அறிவினால் மாட்சிமை யில்லாத பிறவி யுண்டாகும் என்பதாம்.

இதற்கேற்ப மயக்க அறிவு நீக்கி ஞானச் செல்வர்கள் வாழ்ந்தார்கள். அதனுல்தான் தன்னேரில்லாத் தனியனை பற்றற்ற பரமன் பேற்றிற்கு ஓடும் செம்பொனும் ஒக்க நோக்கும் பற்றறுந்த ஞானச் செல்வர்கள் விரைவில் இலக்காயினர். பொருட் செல்வம் படைத்த மக்களோடும் சில வழிகளில், பல பொருள் பெருக்கி வாழவேண்டும் என்றே எண்ணி, எண்ணி, வழிகளை யறிந்து வகையாகப் பண வேட்டையாடுகின்றனர். இவ் வேட்டை காரணமாக எல்லை யில்லாத் தொல்லையில் அல்லலுறும் செல்வர்களுக்கு மன அமைதி யாங்ஙனம்

பிறத்தல் சாலும்? அமைதியற்ற மனத்தில், பண்புதான் வளர வழியேது? ஏதோ இறைவனிடம் சென்று வழிபடுவதும் செலுத்தவேண்டிய கடன் என்ற முடிவிற்கே வருகின்றனர். இக்காரணத்தால் சமயப் பற்றுடைச் செல்வர்கள் நல்வாழ்வு வாழ முடிகிறதில்லை. உலகில் நாம் வாழ்கிறவரை பொருட் செல்வம் அவசியம், அவசியமே! இருப்பினும் செல்வத்தை வளர்க்க முனைவதைப் போல, பண்புள்ள உள்ளத்தையும், ஈகைக் குணத்தையும் செல்வர்கள் தங்கள்பால் வளர்த்துக் கொள்ளின், சமயம் என்ற தூண்டப்பட்ட சுடர் விளக்கிற்கு, மீண்டும் எண்ணெயூற்றி வளரச்செய்ததையொக்கும். சமயத்தில் வாழும்செல்வர்கள் சற்றுத் தனிமையில் அமர்ந்து, மனத்தை நோக்கி, நல் வழி நடக்க, ஈகைக் குணம் வளரத் துணை செய்யாது வாளாவிருத்தல் நன்றோ நீ எனக்கேட்டு, ஆராய்ந்தால், அவ்விடத்தில் உண்மை புலனாவது நிச்சயம் என்பதைக் கூறவும் வேண்டுமோ? செல்வர்கள் நற்சிந்தனையால் சிறக்க! பணி செய்வதால் பயனுறுக! பண்புள்ளம் ஓங்குவதாக! அதன் வழித் தாய் நந்தம் சமயமாம் சைவம் செழிப்புறுவதாக!

---

5. கவிப்பகுதி

திருவிசைப்பா*

(மேலைநகரவை, பண்டிதர், சைவப்புலவர்
த. போ. கார்த்திகேசு அவர்கள்)

உலகினில் சைவமாம் சமயத்திற் பிறந்த நாம் ஓதவேண்டிய சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாம் திருமுறையாய் அமைந்து விளங்குகின்றன. நாம் கோவில் வழிபாடு செய்யுங் காலத்தில் நித்திய பூசை வேளைகளிலும் திருவிழா வேளைகளிலும் முறையே தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா பாடுக என ஒரு பூசகர் வேண்ட அவ்விடம் நின்ற ஓதுவார்களில் ஒருவர் விரும்பிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பாக்களை முறைபற்றி ஓதுவதை

* 28—3—52 இலங்கை வானொலி நிலையப் பேச்சு. இசைவு பெற்று வெளியிடப்பட்டது.

நாம் கண்டும் கேட்டும் உள்ளோம். ஆனால் அவற்றின் உண்மைப் பொருள்களை உற்று யோசிப்பதில்லை. திருவிசைப் பாவும் முக்கியத்துவம் பெறுதல் நாம் அநுபவத்திற் கண்ட, கேட்ட உண்மை. எனவே திருவிசைப்பாக்கள் என்பன யாவை? அவை எமக்கு அவசியமா? என்னும் கேள்வி களுக்கு மறுமொழிகளை அறியவேண்டியவர்களாகின்றோம்.

திருவிசைப்பா என்பது முத்திச் செல்வத்தைத் தரவல்ல பெருமை வாய்ந்த செய்யுள் என்ற கருத்துடையது. இது திருவிசைப்பாமாலை எனவும் வழங்கி வந்தமையைத் திரு முறை கண்ட புராணம் 26 ம் செய்யுளில் "மோகமெறி திரு விசைப்பாமாலை முறையொன்று" என்ற 2-ம் அடியால் அறியக்கிடக்கின்றது. திருவிசைப்பாக்களைப் பாடினோர் ஒன்பது அடியார்கள் ஆவர். இவ்வொன்பது நாயன்மார் களும் இருபத்தெட்டு திருவிசைப்பாப் பதிகங்களையும் அன்பின் முதிர்ச்சியால் பாடிப் பேரின்பம் அடைந்தனர். நம்பிகாட நம்பி அருளிய திருவாரூர் பற்றிய திருவிசைப்பாப் பதிகத்தில் இரண்டு செய்யுள்களும், கருவூர்ப்பிரான் திருப் பூவணத் திருவிசைப்பாப் பதிகத்துள் எட்டுச் செய்யுள் களும் ஓதக்கிடைத்தலின் இப்போதுள்ளன இருநூற்று எண்பத்தெட்டுத் திருவிசைப்பாக்களே. திருவிசைப்பாப் பதிகங்களிற் சில பத்துப்பாக்களையும் சில பதினொரு பாடல் களையும் சில பன்னிரண்டு பாக்களையும் உடையன.

பாடினோர் வரலாறுகளை அறியின் திருவிசைப்பாக்கள் பாடப்பெற்ற காலத்தையும் தெரிந்துகொள்ளக் கூடுமாத லின் அன்னோர் வரலாறுகளை ஆராய்வாம்:

1. திருமாளிகைத்தேவர்: திருவாவடுதுறையில் வாழ்ந்தவர். இவரை போகர் என்னும் சித்தரின் மாணக் கருள் ஒருவர் என்பர். திருமாளிகைப் பெருமான் எனவும் அழைக்கப்பட்டனர். பல அற்புதச் செயல்களை நிகழ்த் தியவர். நாரசிங்கன் என்னும் கொடிய அரசனை வெல்வ தற்கு ஸ்ரீ கோமுத்திசுவரர் கோவிலின் மதிலின் மேலிருந்த எருதுகளை ஒருருவாக்கி யனுப்பி வெற்றிகொண்டனர். திருவாவடுதுறையில் இவர்க்குக் கோவில் அமைந்துள்ளது. இவர் காலம் கி. பி. 10-ம் நூற்றுண்டின் பிற்பகுதியும் 11 ம் நூற்றுண்டின் முற்பகுதியுமென சாசனவாயிலாக அறியக் கிடக்கின்றது. இவர் திருவிசைப்பாக்களில் நான்கு பதிகங்

களைப் பாடியுள்ளார். அந்நான்கும் கோயில் (சிதம்பரம்) பற்றியவை.

2. சேந்தனார் : இவரைப் பட்டினத்தடிகளின் காரியாதிகாரி என்பர் பெரியோர். இவரைச் சோழன் சிறையிலிட்டபோது,

'செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளை நீக்கி யென்முன் காட்டுவெண் காட்டுளானே'

எனப் பட்டினத்தடிகள் பாடியிருத்தலால் இவர் நாங்கூரினர் என்பது தெளிவாகின்றது. இவர் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குத் தவிட்டை அமுதாக நைவேத்தியம் செய்தனர் என்பதை சிவஞானமுனிவர் கூறிய ' வரையேற விட்டமுதம் சேந்தனிட வுண்டனை' என்று தொடங்கும் செய்யுளால் அறிந்துகொள்ளலாம். அன்றியும் திருக்களிற்றுப் பாடியாரின் 53-ம் செய்யுளில் "அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை, யவிழ்ந்த மனத்தாலவிழ்க்க—அவிழ்ந்த சடை, வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற், சேந்தனார் செய்த செயல்" எனக் கூறப்பட்டமை கொண்டும் தெளிதலாகும். திருவிசைப்பாப் பதிகங்களில் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி என்பன மூன்றும் இவரால் பாடப்பெற்றவை. திருப்பல்லாண்டு பாடிய பெருமையும் இவரையே சேரும்.

3. கருவூர்த்தேவர் : இவர் கருவூர்ச்சித்தர் கருவூர்ப் பிரான் எனவும் போற்றப்பட்டனர். கி. பி. 985-ல் சிங்காசன மேறிய 1-ம் இராஜ ராஜச் சோழன் காலத்தவர். இவர் கங்கைகொண்ட சோளேச்சரத்தைப் பற்றியும் பாடியிருத்தலால் கங்கைகொண்ட சோழன் காலத்திலும் வாழ்ந்திருத்தல் வேண்டும். திருவிசைப்பாக்களில் இவர் பாடிய பத்துப் பதிகங்களும் 103 பாட்டுகளை உடையன. கோயில், திருக்களந்தையாதித்தேச்சுரம், திருக்கீழ்க்கோட்டு மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கியசுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சையிராசராசேச்சரம், திருவிடைமருதூர் என்பன அப்பதிகங்களாம்.

4. பூந்துருத்தி நம்பிகாடநம்பி என்பவர் : இவர் முதலாம் ராஜராஜ சோழன் காலத்தில் ஆத்திரேய

கோத்திரத்தவராக வாழ்ந்தவர். காடவர் கோனென்றும் அழைக்கப் பட்டமையால் பல்லவர் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும் கூறுவர். இவர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் இரண்டு. ஒன்று திருவாரூர் பற்றியது. அதில் இடைத்துள்ளன இரண்டு பாக்களே. மற்றையது கோயில் பற்றிய பதிகமாகும்.

5. கண்டராதித்தர் : கண்டராதித்தப் பெருமான் எனவும் போற்றப்பட்டனர். சோழ குலத்தவர் என்பதை இவரியற்றிய ஒரு கோயில்பற்றிய திருவிசைப்பாப் பதிகத்தின் இறுதிச் செய்யுளில் "சீரான் மல்கும் தில்லைச் செம்பொன் னம்பலத்தாடி தன்னைக், காரார் சோலைக் கோழி வேந்தன் தஞ்சையர்கோன் கலந்த, ஆராவின்சொற் கண்டராதித்தன் அருந்தமிழ் மாலைவல்லார், பேராவுலகிற் பெருமையொடும் பேரின்ப மெய்துவரே" எனக் கூறுவதினல் அறியக்கிடக்கின்றது. இவரது காலம் கி. பி. 10-ம் நூற்ருண்டின் பிற்பகுதியாகும்.

6. வேணுட்டடிகள் : இவர் கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்ருன வேணுட்டில் (தென் திருவாங்கூர்ப் பகுதியில்) அரசு செய்தவர்களில் ஒருவர். இவர் துறவியாயுமிருந்திருத்தல் கூடும். அதனல் அடிகள் எனப் போற்றப்பட்டார். திருவிசைப்பாப் பதிகமொன்றைக் கோயில் பற்றிப் பாடியுள்ளார்.

7. திருவாலியமுதனர் : இவர் கோயில்பற்றி நான்கு திருவிசைப்பாப் பதிகங்களைப் பாடியவர். சோழநாட்டில் திருவாலி என்னும் ஊரில் அமுதனர் என்ற இயற்பெயருடையராய் விளங்கியவர். இவர் 2 வது கோயிற்றிருப்பதிகத்தில் முடிவுச் செய்யுளில், "வரைசெய மாமதின் மயிலையர் மன்னன் மறைவல திருவாலி, பரவல் பத்திவை வல்லவர் பரமன தடியிணை பணிவாரே" எனப் பாடியமையின் இவர் அந்தணர் என்பதும், மயிலையர் மன்னனென்பதும் அறியக் கிடக்கின்றன.

8. புருடோத்தம நம்பி : இவர் கோயில்பற்றி இரண்டு திருவிசைப்பாப் பதிகங்களைப் பாடினர். "மாசிலா மறை பலவோது நாவன் வண்புருடோத்தமன் கண்டுரைத்த, வாசக மலர்கள் கொண்டேத்த வல்லார் மலைமகள்

கணவனை யனைவர் தானே" எனப் பாடியிருத்தலின் இவர் பிராமணர் என்பது பெறப்படுகின்றது. புருடோத்தமன் எனவும் போற்றப்பட்டனர்.

9. சேதிராயர்: இவர் திருவிசைப்பாப் பதிகங்களில் ஒன்றைக் கோயில் பற்றிப் பாடினர். இவர் மலையமான் பரம்பரையினர். சேதியர், சேதிராயபிரான் எனவும் சொல்லப்பட்டனர். பெரிய புராணம் கூறும் மெய்ப்பொருணாயனாரும் சேதிநாட்டரசரா யிருந்தனர் என்பதை ஈண்டு நினைவுக்குக் கொணர்தல் வேண்டும். "ஏயுமா றெழிற் சேதியர் கோன்றில்லை, நாயனாரை நயந்துரை செய்தன, தூயவா றுரைப்பார் துறக்கத்திடை, ஆய வின்ப மெய்தி யிருப்பரே" என இவர் பாடியமையால் அரசர் என்பது அறியக்கிடக்கின்றது.

திருவிசைப்பா, திருப்பல்லாண்டை ஒன்பதாம் திருமுறையாகத் தொகுத்த தமிழ் வியாசராகிய நம்பியாண்டார் நம்பி அவர்கள் காலம் பற்றியோ வேறு காரணம் பற்றியோ பாடினோரையும் பதிகங்களையும் அமைத்துத் தந்தனர் எனக் கூறுதல் பிழையாகாது. ஆகவே திருவிசைப்பாப் பதிகங்கள் பாடப்பெற்ற காலம் கி. பி. 8-ம் 9-ம் நூற்றாண்டுகளிலும்கி.பி. 10-ம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 11-ம் நூற்றாண்டின் முற்பகுதியுமென அறிதற்கு இடமாகின்றது.

திருவிசைப்பாப் பதிகங்களைப் பாடவேண்டிய பண்களை,

ஐந்துட னால்வரும் உரைத்த திருக்கடைக் காப்பிற்பண்
ணிறையின் மாளிகைத்தேவர் நான்கிலொன்று காந்தாரம்
மூந்து கருவூரர் பத்திரண்டு புறநீர்மை
மொழிந்திடு காந்தார மொன்று காடவர் கோனிரண்டின்
கந்தலில் சாளரபாணி யொன்று வேணாட்டடிகள்
நவின்ற தொன்று புறநீர்மை திருவாலி யமுதனார்
பந்தமறச் சொன்னன்கி னொன்று நட்டராகம்
பகிர்ந்திடி னொன்றிந்தளம் மற்றெவையும் பஞ்சமமே.

என்ற செய்யுள் வற்புறுத்துவதினாலே பழைய காலப் பண்களாய பஞ்சமம், காந்தாரம், புறநீர்மை, சாளரபாணி, நட்டராகம், இந்தளம்என்பனவற்றைத் தொடர்புபடுத்திப் பாட வேண்டியவர்களாகின்றோம். ஆனால் இவற்றில் பகற்பண்கள், இராப்பண்கள், பொதுப்பண்கள் என்ற

பிரிவுகளுமுண்டு. இப்பண்கள் இக்காலத்தில் வழங்கும் இராகங்களுள் எவ்வெப் பெயர்களால் அழைக்கப்படுகின்றனவென சங்கீத விற்பன்னர்கள் அறியத் தருதல் அவசியமாகின்றது. இது அவர்கள் சைவ உலகிற்குப் புரியும் தொண்டுகளிற் சிறந்த வொன்ருகும்.

திருவிசைப்பாப் பதிகங்களில் பதினைந்து கோயில் பற்றியவை. கோயில் சிதம்பரம் எனவும் பெயர் பெறும். இத்தலம் மற்றைய சிவ தலங்களில் முதன்மை வாய்ந்தது. அன்றியும் ஸ்ரீநடராசப் பெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் விளக்கும் ஆனந்தக் கூத்து செய்யும் தலமாகும். வேண்டுவார் வேண்டுவதை விரைவில் பெறச் செய்யும் அற்புத மூர்த்தியாய சிவபெருமான் தரிசிப்போரை 'என்று வந்தாய்' எனக் கேட்கும் திருக்குறிப்புடன் விளங்கும் திவ்விய தலம். எனவே இத்தகைய சிறப்பு வாய்ந்த தலத்தைப் பற்றிய திருவிசைப்பாக்கள் பல காணப்படுதலும், ஓதப்படுதலும் பொருத்தமே. திருவிசைப்பாப் பாடல்கள் பெற்ற மற்றைய தலங்கள் முன்னே கூறப்பட்டன. இவை யாவும் இந்தியாவிலுள்ளன.

திருவிசைப்பாப் பதிகங்களின் பெயர்கள் சில தலப் பெயர்களாலும், சில பதிகங்களில் வரும் முதலிரு சொற்களாலும் அழைக்கப்படுகின்றன. திருமாளிகைத் தேவர் பாடிய முதற்றிருப் பதிகமும், சேந்தனர் பதிகங்களும், கருவூர்த்தேவர், நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனர், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்போரின் திருவிசைப்பாக்களும் தலப்பெயர்கள் பற்றியவை. சேந்தனர் திருவிசைப்பாக்களில் திருவாவடுதுறை, திருவிடைக்கழி என்ற தலங்கள் பற்றிய பதிகங்களும் திருவாலியமுதனர் கோயில் பற்றிய 2-ம், 4-ம் பதிகங்களும், புருடோத்தம நம்பி பாடிய கோயில் பற்றிய இருபதிகங்களும் சேதிராயர் பாடிய கோயில் பற்றிய ஒரு பதிகமும் அந்தாதியாய் அமைந்துள்ளன. திருவிசைப்பாக்கள் சிவபராக்கிரமங்களைத் தெள்ளிதில் விளக்குவனவாய்த் திகழ்கின்றன. அவற்றில் சிவன்றன் திருக்கோலத்தைப் பாதாதி கேசமாய் (பாதம் முதல் தலைமயிர் ஈரும்) விளக்குவன திருமாளிகைத் தேவர் கோயில் பற்றிய

இரண்டாம் திருப்பதிகமும் திருவாலிய முதனூர் கோயில் பற்றிய முதலாம் திருப்பதிகமுமாகும். சேந்தனூர் பாடிய திருவிடைக்கழித் திருவிசைப்பாப் பதிகம் கலியுக வரத ராகிய ஸ்ரீ ஸ்கந்தப் பெருமான்மீது பாடப்பெற்றது.

திருவிசைப்பாப் பதிகங்களிற் சில கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் (கடவுளிடத்து மானிடப் பெண்கள் விரும்பிய பக்கம்) என்னும் புறப்பொருள் துறையில் பாடப் பெற்றனவாகக் காணப்படுகின்றன. திருமாளிகைத் தேவர் பாடிய கோயில் பற்றிய உறவாகிய யோகமும் என்ற தொடக்கத்ததும் திருப்பதிகமும், சேந்தனூர் பாடிய திருவாவடுதுறை திருவிடைக்கழித் திருப்பதிகமும் கருவூர்த்தேவர் பாடிய திரைலோக்கிய சுந்தரம் என்னும் 5-ம் திருப்பதிகமும் இப்பிரிவில் அடங்குவன எனலாம். இனி திருவிசைப்பாக்களிற் சிலவற்றை ஆராய்வோம்:—

'ஒளிவளர் விளக்கே' என்று தொடங்கப்பட்ட முதலாம் திருப்பதிகத்தை உற்று நோக்குவோம். அப்பதிகத்தில் ஒவ்வொரு பாட்டின் கடைசியிலும் "தொண்டனேன் விளம்புமா விளம்பே, பணியுமா பணியே, கருதுமா கருதே, உரைக்குமா றுரையே, நணுகுமா நணுகே, இசைக்குமாறிசையே, நுகருமா நுகரே, புணருமா புணரே, தொடருமா தொடரே, விரும்புமா விரும்பே, நினையுமா நினையே என முறையே முடிதலைக் காண்கிறோம். இவ்விடத்தில் எமையாளும் ஈசன் எம்முடனுயும் நிற்கும் நிலையைத் திருமாளிகைப் பெருமான் நன்கு தெளிவு படுத்தினர். சேந்தனூர் திருவிசைப்பா பதிகத்தில்,

"*கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்*
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே"

என்ற 2-ம் பாட்டில் 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி' என சிவனை மேலாகச் சொல்லுதல் மிகவும் பொருத்தமே. கல்லாதவரால் அறியப்படாதவர் எம்பிரானெனவே கல்வி

எவர்க்கும் அவசியம் என்பதும், எந்நேரமும் சிவன் நினைப் பிற்குரியவன் என்பதும் பெறப்படுகின்றன. கருவூரார் திருவிசைப்பாக்களில் கங்கை கொண்ட சோளேச்சரப் பதிகத்தில் எட்டாம் செய்யுளை நோக்குவோம் :—

"தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
    தயாவை நூறுயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுன்கண் வைத்தவருக்
    கமருல களிக்கு நின்பெருமை
பித்தனென் றொருகாற் பேசவ ரேனும்
    பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தலஞ் சென்னிமேல் வைத்த
    கங்கை கொண்ட சோளேச் சரத்தானே."

இச்செய்யுளில் கிளிபோன்ற வார்த்தை பேசும் பெண்கள்மேல் வைத்த அன்பை ஒரு லட்சம் பங்குகள் செய்து அவற்றில் ஒரு பங்களவை சிவனிடத்தில் வைப்பின் தேவருலகைக் கிடைக்கச் செய்யும் பெருமையுடையவன் சிவபிரான் எனச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறாயின் எமது அன்பு நிலையை எப்படிக் கணக்கிடுவது! 'நீரோங்கி வளர் கமல நீர்பொருந்தாத் தன்மை யன்றே' என்ற முதல் உடைய 122-ம் செய்யுளை நோக்குமிடத்து, நீரிலே வளர்ந்தும் நீருடன் ஒட்டாத தாமரை யிலைபோல் உலகில் பிறந்து வாழினும் உலகுடன் ஒட்டாது உன் அடியையே போற்றுகின்ற எனக்கு அருள் செய்க என்ன இச்செய்யுளால் வேண்டினர் கருவூர்த் தேவர். "பண்ணிய தழல்காய் பாலளாநீர்போற் பாவமுன் பறைந்து பாலணைய, புண்ணியம் பின் சென்றறிவினுக் கறியப் புகுந்ததோர் போகினிற் பொலிந்து, நுண்ணியை யெனினும் நம்ப நின்பெருமை நுன்னிடை யொடுங்க நீவந்தென், கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை கொண்ட சோளேச்சரத்தானே." இது 141-வது செய்யுள். இச்செய்யுளில் பாலுடன் கலக்கப்பட்ட நீர் நன்கு காய்ச்சப்படுவதால் இல்லாது போக பால் மாத்திரம் மிஞ்சுவதுபோல் இடைவிடாது சிவத்தியானம் செய்வதால் பாவம் தேய புண்ணியம் மிகுதியாதற்கு கருவூரார் காட்டும் உவமைச் சிறப்பு படிப்பவர் மனதை இன்பத்தில் மூழ்கச் செய்கின்றது. இவ்வாறு பற்பல உவமைகள் ஆங்காங்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளன. திருவிசைப்

பாக்கள் திருவாசகத் தேனைப் போன்று ஓதுவார்க்குத் தெவிட்டாத வின்பம் தரவல்லன. அடியார்கள் பலர் திருவிசைப்பாக்களிற் போற்றப்படுகின்றனர்.

இனி, திருவிசைப்பாக்களை யோதுவதன் அவசியம் பற்றி ஆராய்வோம் :—கி. பி. 13-ம் நூற்றாண்டில் மெய்கண்ட சிவாச்சாரியாரால் செய்யப்பெற்ற சிவஞானபோதம் கூறும் பன்னிரண்டு சூத்திரங்களுக்கும், சைவத் திருமுறைகள் பன்னிரண்டிற்கும் பொருத்தம் அமைந்திருத்தலை ஆராய்ச்சியாளர் எடுத்துரைக்கின்றனர்.

"ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே."

என்ற சிவஞான போதம் 9-ம் சூத்திரம் ஆன்ம சுத்தி பண்ணும் வழியை விளக்குவது. அஃதாவது வாசனாமலம் தாக்காது உயிரினைப் புனிதமாக்குவது என்பது. எனவே சைவத் திருமுறைகளில் 9 ம் திருமுறையா யமைந்த திருவிசைப்பாக்கள் ஆன்மசுத்தி செய்வதற்கு ஓதப்படவேண்டிய பாடல்கள் என்பது தானே வெளிப்படுகின்றமையினாலே சைவ சமயத்தவர்களாகிய நாமனைவரும் திருவிசைப் பாக்களை ஓதவேண்டியவர்களாகின்றோம். இது பற்றியே சைவக் கோயில்களில் 'திருவிசைப்பாப் பாடுக' என நினைவூட்டப் படுகின்றது. திருவைந்தெழுத்தை விதிப்படி தியானிப்பதும் திருவிசைப்பாக்களை ஓதுவதும் சமமான பயனைத் தரும் எனச் சொல்லுதற்கிட மிருத்தலினாலே நமக்குத் திருவிசைப்பாக்கள் அவசியம் வேண்டியனவாய் விளங்குகின்றன.

அன்றியும் அறிவில் மேம்பட்ட சமயப் பெரியார்கள் யாவரும் "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கொள்கையுடையவர்களென்பது அவர்களது சரித்திரங்களை ஆராய்வார்க்கு இனிது தெளிவாகும். இவர்களைப் போலவே திருவிசைப்பாக்களைப் பாடிய ஒன்பது நாயன்மார்களும் தாம் பாடிய ஒவ்வொரு திருப்பதிகங்களின்

இறுதிச் செய்யுள்களில் ஓதுவார் சாதித்துப் பெறக்கூடிய பயன்களை உரைத்தனர். ஆதலின் நாம் முத்திச் செல்வத்தை அனுபவிப்பதற்குத் திருவிசைப்பாக்களையும் தினமும் ஓதுவோமாக.

“ இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்த
மேழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
அஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்த செஞ்சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருசிற்றம் பலமே. ”

---

7. ஆராய்ச்சிப் பகுதி

பிற்காலச் சோழர் சரித்திரம் - *T. V. S.* பண்டாரத்தார்

(K. S. வைத்தியநாதன்)

பிற்காலச் சோழர் சரித்திரத்தின் இரண்டாம் பகுதி ஸ்ரீ T. V. S. பண்டாரத்தாரால் சமீபத்தில் வெளியிடப் பட்டது. இந்நூல் அதிராஜேந்திர சோழன் இறந்த பின்னர் சாளுக்கிய சோழனான முதலாங் குலோத்துங்கன் சிம்மாதன மேறியது முதல்கொண்டு பதிமூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழராஜ்யம் பாண்டிய நாட்டோடு சேர்க்கப்பட்டுப் பாண்டியர தரசாட்சிக் குள்ளானது வரை உள்ள சோழமன்னர் வரலாறுகளைத் தொகுத்துக் கூறுகின்றது. இந்நூல் எழுதப் பெற்றுள்ள முறை நன்கு அமைந்துள்ளது. மன்னர் முடிசூடும் வரலாறு, அவரது வேறு பெயர்கள், அவர்கள் காலத்துப் போர்கள், பிறநாட்டுத் தொடர்புகள், உள்நாட்டு நிலைமை, அரசாட்சியின் சிறப்புகள், சமயநிலை, தலைநகர், மன்னனது திருப்பணிகள்,

மனைவி மக்கள் முதலானோர், அரசியல் அதிகாரிகள், குறுநில மன்னர்கள், அவைக்களத்துப் புலவர்கள், இது போன்ற பிறவற்றின் வரலாறுகளை வரிசைப்படியே ஒவ்வோர் அரசரைப் பற்றிய அதிகாரங்களிலும் தெளிவுபட எழுதியுள்ளார். இவையும் நூலின் எளிய நடையும் போற்ற வேண்டியதே. இதுகாறும் வந்துள்ள பல பேரறிவாளர்களது வரலாற்று நூலாராய்ச்சிக் கட்டுரைகளையும் புதிதாகக் கண்டு வெளிப்படுத்தப் பட்டுள்ள ஆதாரங்களையும் பார்த்த பின்னரே ஆசிரியர் இந்நூலை எழுதியுள்ளார். சிற்சில இடங்களில் பேராசிரியர்களது கருத்துக்களை ஆராயாது ஏற்காமல், தவறுகளை எடுத்துக் காட்டியுள்ளது மகிழ்ச்சிக்குரியது. எனினும் சில இடங்களில் பண்டாரத்தாரது கருத்துக்களை ஒப்புக்கொள்ள இயலாதபடி கூறியிருப்பதைக் கண்டு வருந்தவும் வேண்டியிருக்கின்றது. பில்ஹணர் போன்ற வரலாற்று நூல்களை முற்றும் தழுவி குலோத்துங்கன் சோழநாட்டைக் கவர்ந்து, அரசனைக் கொன்றோ கொல்லுவித்தோ பட்டம் பெற்றான் என்ற இதுபோன்ற பொருத்தமில்லாக் கூற்றுகளை அறவே ஒழித்து இவைகளின் ஆதாரம் அற்ற தன்மையையும் எடுத்துக் காட்டியுள்ளார். கலிங்கத்துப்பரணியின் புதுப் பதிப்பில் கண்டுள்ள பிற பழைய பதிப்புகளில் காணாத சில ஆதாரம் காட்டப்பெறாத தாழிசை (p 26) களை எடுத்துக்காட்டிப் பழைய ஏட்டுப் பிரதிகளில் இஃதுளதா என வினவுகின்றார். இதுபோலவே அனந்தபன்மனைக் குறிக்கும் தாழிசையும் உள்ளது கூறாது விடுத்தது ஏனோ? குலோத்துங்கன் மேலைச்சாளுக்கியருடன் நிகழ்த்திய போர் கி. பி. 1076-ல் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பது, இம் மன்னன் 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகளிலே இவ் வெற்றிகள் கூறப்பட்டிருத்தற்கு முரண்பட்டுள்ளது. கி. பி. 1075 இலோ முன்னரோ நடைபெற்றிருத்தல் வேண்டும்.

குலோத்துங்கன் காலத்தில் குறைந்தது மூன்று கலிங்கப் போர்கள் நிகழ்ந்தன வென்றும் இவை முறையே கி. பி. 1076, 1096, 1112 ஆண்டுகளுக்குமுன் நடைபெற்றன வென்றும் தக்க சான்றுகள் காட்டி. இடாக்கரம்பைச் சாஸனம் பதிப்பித்த பேரறிவாளர் K. V. S. அய்யரவர்கள்

காட்டியுள்ளார். (Ep. Ind. Vol. XXII. p. 139-143) இவ்வாராய்ச்சிக் கட்டுரையைப் பண்டாரத்தார் நன்முகப் படித்திருந்தும் இதுவரை பிறர் கூறிப் போந்தபடியே இரண்டு போர்களை மட்டும் கூறி, உண்மை வரலாற்றிற்கு விரோதமானதை எழுதலாயினர். முதற்போரில் தேவேந்திரன் கொல்லப்பட்டதும், கலிங்கப்பரணியில் கூறியுள்ளது போல் ஜயத்தம்பம் நாட்டப்பெற்றுப் பரணிகொண்டதும் கி. பி. 1076-ல் நடைபெற்றது மறுக்கமுடியாத நிகழ்ச்சியே. கோபாலய்யரின் புதுப்பதிப்பில் ஆதாரம் காட்டப் பெருத தாழிசையொன்றில் அனந்தபன்மன் என்ற கலிங்கவேந்தன் பெயர் கூறப்பட்டுள்ளதை (p. 27, 29) ஆதாரமாகக் காட்டுவார்க்குங்கூட சமாதானம் இடாக்கரம்பை கல்வெட்டுப் பதிப்பாளர் அய்யரவர்கள் மிக அழகாகக் கூறியுள்ளதைப் பண்டாரத்தார் கவனிக்கவில்லைபோலும். (Q. J. M. S. XXVIII. No. 4)

குலோத்துங்கன் வரலாற்றில் கலிங்கமன்னன் வேங்கியைப் படையெடுத்துவந்த செய்தி காணப்படவில்லை. சாளுக்கிய விக்கிரமாதித்தனின் தண்டநாயகன் அனந்தபாலய்யா வேங்கிநாட்டை ஆட்சிபுரிந்தது கி. பி. 1118 முதற்கொண்டு என்று கூறியுள்ளது தவறு. சில ஆண்டுகள் முன்பிருந்தே இப்பட்டத்துடன் விளங்குகிறுன் என்பதைப் பண்டாரத்தார் அறிய வேண்டும்.

கலிங்கப் போரில் கருணுகரனுல் தோல்வியுற்று ஓடி ஒளிந்த அனந்தபன்மன் தன் மகள்வயிற்றுப் பேரனே என்று சிறிதும் ஆராய்ச்சியின்றி இதுகாறும் பலர் கூறிப் போந்ததைப் பண்டாரத்தார் பிழையுடைத்தென தெளிவாக்கியுள்ளார். எனினும், அரசன் செல்லாது காஞ்சியிலிருந்தபடியே, தொண்டைமானை அனுப்பி வெற்றிபெற்று, பரணியில் விவரிக்கப்பட்ட முதற் கலிங்கப்போரை, பிற்காலத்தில் 42-ம் ஆண்டின் முன் அரசனே பலத்த சேனையுடன் சென்று வென்று வந்த கலிங்கப்போர் என சிறிதும் ஆராயாது, இதுகாறும் கூறிவந்த வரலாற்று ஆசிரியர்கள் வழியே சென்று, மூன்று கலிங்கப் போர்கள் நிகழ்ந்த உண்மையை உணர்த்தாமல், இடாக்கரம்பைச் சாஸனப் பதிப்பைப் படித்திருந்தும் பண்டாரத்தார் இப்படி எழுதியது பொருத்தமாயில்லை.

உத்தமசோழன் வரலாற்றில் இம்மன்னர் உத்திராடத்தில் பிறந்தவர் என்று கொண்ட நீலகண்ட சாஸ்திரியாரின் கொள்கை தவறு என்றும், ஆனித் திங்கள் உத்திரட்டாதி நாளில் பிறந்தவன் என்று ஆதாரங் காட்டியுள்ளது பொருத்த முடைத்தே. விக்கிரமனும் வேங்கி நாடும் என்ற பகுதியில் விக்கிரமன் போர்களைக் கூறாது விட்டது பெருங்குறை. ஒட்டக்கூத்தர் விக்கிரமன் பேரில் பரணி பாடியுள்ளது பண்டாரத்தார் அறிந்தும் (P. 79) இதனை ஆராய்ந்து வடநாட்டுப் போரைக் கூறாது விட்டார். விக்கிரமன் காலத்திலேயே பெரும் போர்களின்மையின்' என்று (P. 79) கூற முன் வந்தது பெரிதும் வருந்தத் தக்கதே.

விக்கிரமன் காலத்து அரசியல் தலைவர்களும் சிற்றரசர்களும் என்ற தலைப்பின்கீழ் செஞ்சியர்கோன் காடவனைப் பற்றிக் கூறுங்கால இவன் பல்லவர் குலத்தினனென்றும் (P. 85), செஞ்சி நாங்கொற்றன் ஆடவல்லான் கடம்பன் என்பான் இவனே என்றும் கூறியுள்ளது மிகவும் தவறு. என்னை ? செஞ்சி என்ற ஊர்ப்பெயர் ஒன்றே இருவர் பேரிலும் உள்ளது. செஞ்சியர்கோன் செஞ்சியர்க்கு அரசன் காடவன். ஆனால் நாங்கொற்றனே கடம்பன். காடவன் வேறு கடம்பன் வேறு என்பது கல்வெட்டிடைப் பழகுவோர் யாவரும் அறிந்தது. இவர் இருவரும் ஒருவர் என்பது ஒப்பமுடியாத கூற்று.

இரண்டாம் குலோத்துங்கன் பேரம்பலத்தையும் உட்கோபுரத்தையும் திருச்சுற்று மாளிகையையும் மாமேரு போலப் பொன்மயமாக்கினன் என்று பண்டாரத்தாரே 93-ம் பக்கத்தில் கூறிவிட்டு, திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் கூறியுள்ள பேரம்பலம் பொன்வேய்ந்த அனபாயன் மூன்றும் குலோத்துங்கன் என்று மார்தட்டிக் கூறுவது வியப்பினும் வியப்பே. என்னை ? இரண்டாம் குலோத்துங்கனே சேக்கிழார் காலத்து மன்னன் என்ற உண்மை தவிர்க்க முடியாதது. இவர் கூறும் காரணங்கள் வியப்பிற் குரியன. ஒட்டக்கூத்தர் சேக்கிழாரைப்பற்றிக் கூறவில்லை என்பதும், மூன்றும் குலோத்துங்கன் பேரம்பலம் வேய்ந்தான் என்று கூறப்படுவதும், பேரம்பலம் பேரம்பலமே என்ற கார

ணங்களே. பேரம்பலம் பொன்வேய்ந்த அனபாயன் இரண்டாம் மன்னன் அல்ல என்பதற்கு ஒரு சான்றும் கூருது விட்டார். கல்வெட்டுக்கள்மட்டும் ஆதாரமாகக் கொண்டே இவ்வுண்மை வலியுறுதல் காண்க. சேக்கிழார் கூறியது போல் கல்வெட்டுகளிலும் இரண்டாம் மன்னன் பேரம் பலம் பொன் வேய்ந்தவன் என்றும், மூன்ரும் மன்னனை இப்பெயர் கொண்டு கூருது பேரம்பலம் பொன் வேய்ந் தான் எனப் பிரித்துக் கூறுவதொன்றே, சேக்கிழார் காலத் தவன் இரண்டாம் குலோத்துங்கன் என்று வலிப்படுத்தா நிற்கும்.

இனி பிற்கால வைணவ சமயத்தினர் இவ்விரண்டாங் குலோத்துங்கன் மீது பழி கூறி கிருமிகண்டன் என்று இழித்துரைத்ததையும் வேறு கற்பனை என்று நன்கு எடுத் துக் கூறியுள்ளது மகிழ்ச்சிக்குரியது.

இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதி ராசன் வரலாறுகளில் பல்லவராயன் பேட்டை முதலிய கல்வெட்டாராய்ச்சிகளைப் பெரிதும் பயன்படுத்தி எழுதி யுள்ளது நன்று. சோழநாட்டில் இராசராசனது 19-ஆம் ஆண்டிற்குப் பிறகு கல்வெட்டுகள் இல்லை என்றும், வடக்கே ஆந்திர நாட்டில் 26, 28-ஆம் ஆண்டு கல்வெட்டு கள் உள்ளன என்பதும், இவை பத்து ஆண்டுகள் சென் றும் அறியாமையால் நேர்ந்த பிழைகளே என்றும் கூறி யுள்ளதை ஆராயவேண்டியது.

மூன்ரும் குலோத்துங்கன் காலத்தில் பாண்டியனேடு இரண்டாம் போர் புரிந்த வரலாற்றில் மன்னன் எல்லோ ரையும் ஆதரித்தனன் என்றும் கூறியுள்ளது உண்மைக்கு முரண்பட்டது. இவன் பிறற்கிழைத்த அவமானத்தைத் தானே தன் ஆட்சிக் கடைசியில் தன் பகை மன்னனிடத்தி லேயே அனுபவிக்க வேண்டி வந்ததென்பது சரித்திரம் கண்ட உண்மை' (Ep. Id. XXII. P. 41) மூன்ரும் ராச ராசன் இவன் மகன் என்றதற்கு ஆதாரம் ஒன்றும் இல்லை எனினும் இவன் புதல்வனே என்பதில் ஐயம் ஒன்றுமில்லை என்றும் கூறுகிருர் (P. 164). குலோத்துங்கன் ஆட்சியின் இறுதியில் நிகழ்ந்த நிகழ்ச்சி பாண்டிய வேந்தனுல் பொன் னமராபதியில் அடைக்கலம் புகுந்து தனக்குரிய சோழ

நாட்டை மீண்டும் பெற்றுக்கொண்டது என்றது எவ்வாற்ருனும் பொருந்தாது என்று (P. 172) கூறினதற்குக் காரணம் காட்டவில்லை. 15-ஆம் ஆண்டொரு கல்வெட்டிலேயே குறித்துள்ளதாம். இதனை உண்மை எனக் கொள்ள. சிறிதும் இடம் இல்லை என்கிருர். ஏனே? இதனை நன்கு ஆராய்ந்து எழுதியுள்ள சுந்தர பாண்டியன் கல்வெட்டுப் பதிப்பில் விளக்கப்பட்டிருத்தலைப் பண்டாரத்தார் கவனிக்கவில்லை போலும். (Eq. Id. XXII. P. 41-2)

தில்லையுலா வந்தளித்த காடவன் மணவாளப் பெருமாள் என்றும் இவனுக்குக் குலோத்துங்கன் தன் மகளை மணஞ் செய்து கொடுத்தான் என்றும் (P. 179) கூறினது பொருந்தாது. சிறைக்கோட்டத் தகப்படுத்தப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பெற்ற மூன்ரும் இராசராசன் மகள் என்பதும், மணமகன் வயதுமுதிர்ந்த வாணிலை கண்ட மணவாளப் பெருமாள் அல்லனென்றும் உயர் வீரன் கோப்பெருஞ் சிங்கனே மணமகன் என்றும், வரலாற்று விவரங்களை நன்குணர்ந்தார் யாவரும் அறிவர். கல்வெட்டுப் பரிசோதகர்கள் சிலர் கொண்ட கருத்துப்படியும், அவர்களால் வரையப்பட்ட அரசாங்க வெளியீட்டுப் பல கல்வெட்டுகள் என்ற பதிப்பைக் கொண்டும் பண்டாரத்தார் மணவாளப் பெருமாள் கோப்பெருஞ் சிங்கன்என்ற பெயரும் கொண்டவன் என்றும், அப்பெயர் கொண்டவருள் இவன் முதலாமவன் என்றும், இவன் மகனே இரண்டாம் கோப்பெருஞ் சிங்கன் என்றும் எழுதியுள்ளார். இக்கொள்கை உண்மைக்கு முரண்பட்டது. தக்க சான்றுகளால் மணவாளப் பெருமாளிற்கு கோப்பெருஞ் சிங்கன் என்ற பெயரே இல்லை என்றும், கோப்பெருஞ் சிங்கன் ஒருவனே என்றும் ஆராய்ச்சியாளர் நிர்ணயித்துள்ளார். (Q. J. M. S. XXI P. 63. 78.) மணவாளப் பெருமாளிற்கு இப்பெயர் எங்கும் கூறப்படாமையாலும் அரியணை ஏறிய பின்னரும் மணவாளப்பெருமாள் என்ற பேரே இம்மன்னன் மேற்கொண்டதும் இவ்வுண்மையைத் தெற்றென விளக்கும். நிற்க தகப்பன் பெயர் மகனுக்கும் உள்ளது பல்லவ குலத்தில் எவ்விடத்திலும் காணப்படாத தொன்று.

மூன்றும் இராசராசன் வரலாற்றில் கி. பி. 1219-ல் பாண்டியன் படையெழுச்சி ஏற்பட்டது என்கிறார். ஆனால் அது கி. பி. 1217-ம் ஆண்டுகளிலேயே நடைபெற்ற தென் பதை ஆராய்ச்சியாளர் நன்கு எடுத்துக் காட்டியுள்ளனர் (Ep. Id. XXII. P. 41) ஆதலின் தவறென்க.

இராசராச சேதியரராயனுக்குக் கோப்பெருஞ்சிங்கன் தன் மகளை மணஞ்செய்துகொடுத்து உறவும் நட்பும்கொண்டனன் என்று (P. 204) கூறுகிறார். இந்நிகழ்ச்சி கோப்பெருஞ் சிங்கனுக்குச் சற்றேறக்குறைய 75 வருடங்களுக்கு முன் கி. பி. 1162-ல் இருந்த காடவராயன் காலத்து நிகழ்ந்தது. இச்செய்கையைக் கோப்பெருஞ்சிங்கன் மீதேற்றிக் கூற முன் வந்தது வரலாற்றிற்கும் சரித்திர உண்மைக்கும் மிகவும் வேறுபட்டுள்ளது(Ep. Id. XXVII. P. 91)

இவை யெல்லாம் திருத்தப்பட வேண்டிய பகுதிகளாகையால் எடுத்துக்காட்டப்பட்டன.

நூல்நடை தெளிவுடன் எழுதப் பெற்றுள்ளது. இப் புத்தகத்தை அண்ணமலை பல்கலைக்கழகத்தார் மறுபடியும் அச்சிடப் புகுந்தால் ஸ்ரீ பண்டாரத்தார் மேற்கூறிய விஷயங்களைச் சிறிது ஆராய்ந்து ஆராய்ச்சிக் கட்டுரை நிறைந்த Ep. India போன்ற வெளியீடுகளை நன்கு கவனித்து, தவறான கொள்கைகளைத் திருத்திப் பதிப்பை வெளியிடவேண்டும்.

——

8. விரிவுரைப் பகுதி

*ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளும் பெரியபுராணமும்

உலகின் கண் நிறைந்துள்ள எண்பத்து நான்கு லக்ஷயோனி பேதமுள்ள ஜீவவர்க்கங்களுள் மனிதப் பிறப்பே உயர்வாகக் கருதப்படுகின்றது. ஆயினும் இயல்பாக யாவரும் இச்சிக்கும் இன்பம் அணுவளவும் காணப்படுவதில்லை. "ஓரி னுள்ளமே பாரின் மானுடர் முதலுள வறுபிறப் பூடுஞ், சேரு மின்பமொன் றில்லை யென்பது பிரத்தி யக்கமா நீவல்லாய்" என்பது சாந்தலிங்க சுவாமிகள் கூற்றாகும். இன்பத்தை நாடுவதே நம்மனோரியல்பு. இன்பம் கலவாததை யிகழ்கின்றோம். பிறப்பு இன்பத்தைப் பயக்காவிடின் அதனை வெறுத்தல்வேண்டும். நம்மாசிரியர்கள் தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய தோத்திரங்களிலெல்லாம் பிறவி வேண்டாம் என்று அழுதரற்றினர்.

திருந்தா வமணர்தந் தீநெறிப் பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா வரக்க னுடனெரித் தாய்பா திரிப்புலியூர்
இருந்தா யடியே னினிப்பிற வாமல்வந் தேன்றுகொள்ளே.

என வரும் திருநாவுக்கரசுகளது திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தமும்,

இறவாத வின்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டுமீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்று
மறவாமை வேண்டுமின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
யறவாநீ யாடும்போதுன் னடியின்கீ ழிருக்கவென்றார்

---

*திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் சொற்பொழிவின் சுருக்கம். 9—9—34-ல் நிகழ்த்தியது. 'கொங்கு மல' ரில் முன்னம் ஒருமுறை வெளிவந்தது.

எனவரும் காரைக்காலம்மையாரின் விண்ணப்பமும் குறிக்கத் தக்கன. இவர்கள் விரும்பியது பிறவாமையே. பிறப்பு துன்பமுடைமையான் அடியவர்களஞ்சினுர்கள். உலக வாழ்க்கை துன்பத்திலுழலச் செய்வித்தது. யாதுசெய்வது என்று அறியாது திகைத்தனர். துக்கத்தினின்றும் விடுதலையடைய வேண்டுமென்றே நாடினுர்கள். "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது, வேண்டாமை வேண்ட வரும்" என்பது திருக்குறள். உலகம் துன்பமாதலறிந்தவன் ஒரு பொருளை வேண்டுவனுயின் அப்பொருள் பிறவாமையே. ஆகவே பிறப்பையறுத்தல் அன்பர்களுக்கு இலட்சியமாயிற்று.

இனி இக்கொடிய பிறப்பை யொழித்தற்குச் சாதகமாக வழி யாதென ஆராய்வோம். ஒரு கெடுதி சம்பவிக்கப் போகிறதென்று அறிந்த காலத்து அதனுக்குக் காரணமாயுள்ளவற்றைச் சரிப்படுத்தி அக்கெடுதியைத் தவிர்ப்பது போல் பிறவிக்குக் காரணமாயுள்ளவற்றை நீக்கிக்கொள்ள முயலவேண்டும். பிறவிக்கு மூலமாயிருப்பது பேதமையே. அம்மயக்கம் இறைவன் என்றுண்டோ அன்றுமுதல் உயிர்களைப் பற்றிக்கொண்டே யிருக்கின்றது. மயக்கவுணர்ச்சியே பிறப்பாகும். "மருளானு மாணுப் பிறப்பு" என்பது திருவள்ளுவர் ஆப்தமொழி. இன்பமில்லாத பிறப்பு விபரீதயுணர்ச்சியானே பெறப்படும். மருள், மயக்கம், விபரீத வுணர்ச்சி, அவிச்சை என்பன ஒரு பொருட்கிளவி. மருள் என்று மொழிந்தவுடன் உடனே உணரும் பொருள் பித்து என்பதாகும். உலகநடையில் ஒரு காதலனைப் பைத்தியம் பிடித்தவன் என்று கூறுகிருேம். உண்மையை மற்ருென்ருகக் கருதுபவன் பித்துப் பிடித்தவனுவான். பொருளல்லாதவற்றைப் பொருள் என்றறிதல் மருள். மறுபிறப்பில்லை, தெய்வமில்லை, நல்வினை தீவினையில்லை இவை ஒவ்வொன்றும் அம் மருளினம்சங்களே. உண்மை நூலல்லாதவற்றை உண்மை என்று கோடலும் மருளே. அதுவே அவிச்சை. இது துன்பத்திற்குக் காரணமாயுள்ளவையான் இதனைப் போக்கி இன்பம் நாடவேண்டும். அவிச்சையைப் போக்குவதுதான் பிறவிக்கடலைக் கடத்தல் என்று கூறுவர் ஆன்ருேர். பிறவிக்கடல் அவிச்சை சொரூபமாயுள்ளது. இவற்றினின்றும் நீங்கி இன்பத்தைச்

சாரமுயலுதல் அவசியமாகும். அவ்வின்பம் செம்பொருள் வடிவம் எவற்றிற்கும் மேலாயதோர் சிறப்புடையது. "பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னுஞ், செம் பொருள் காண்பதறிவு" என்று திருவள்ளுவர் அறிவுறுத் தினர். செம்பொருளாவது உயிர்கள் தன்னறிவாலும் பற்றியுள்ள பாசவறிவாலும், அறியமுடியாததாய் நிற்கும் பதியே யாகும். அவ்விறைவன் எல்லாவற்றினும் சிறந்த தாய் இன்பசொரூபனுகலின் சிறப்பென்னும் செம்பொரு ளாயினுன். காண்பது என்பது உயிர் தன் னவிச்சையினின் றும் நீங்கிச் செம்பொருளாகிய இறைவனேடு ஒற்றுமையுற இடைவிடாது தியானித்தல். ஆகவே ஆண்டவ னருள்வய மாய் நின்று பேதமை நீங்க உண்மையறிவு பெறுவதே பிறவியினின்று விடுதலை என்ற முத்தியாகும்.

பிறவியெனும் கூட்டத்தில் உயிர் எனும் பறவை அடைக்கப்பட்டிருக்கிறது. இக்கூட்டத்திலிருந்து வெளிக் கிளம்பப் பறவைக்கு இரு பெருஞ்சிறகுகள் இன்றியமையா தன. அதுபோல் உயிரும் விடுதலையடைய இரு பெருஞ் சிறகுகளை உடைத்தாயிருத்தல்வேண்டும். எப்பொருளிலும் பற்றுவிடுதல் ஒன்று, தெளிவடைந்தறிவு உடைத்தாதல் மற்றொன்று; இவ்விரண்டுமே ஆன்மாவுக்குப் பெருஞ் சத்தியையீந்து முத்தியடைதற்குச் சாதகமாகின்றன. இதனைக் கம்பர்.

> அருஞ்சிறைப் பலமவருந் துறவு மவ்வழி
> தெரிஞ்சுற வெனமிகுந் தெளிவு மாய்வரும்
> பெருஞ்சிற குளவெனிற் பிறவி யொன்றுமிவ்
> விருஞ்சிறை கடத்தலி னினிதி யாவதே

என வருளியது கவனிக்கத்தக்கது. பற்று விட்டு ஞான மடைந்த ஒருவனுக்கு நல்லாரிணக்க மத்தியாவசிகம். அன்பர்களுறவு அவனைப் பற்றியிருந்த மலங்கள் மீண்டுஞ் சாராமலிருக்கச் செய்கின்றது. "சார்புணர்ந்து சார்பு கெட வொழுகின் மற்றழித்துச், சார்தரா சார்தரு நோய்" என்பது திருவள்ளுவராணை யன்றோ? எல்லாப் பொருட் குச் சார்பாயுள்ளவன் செம்பொருளாகிய இறைவன். அவன்மாட் டன்புடையார் தாம் பிறருக்குற்ற துணை

யாவார்கள். அவர்களுறவே உண்மைப்பயனை அளிக்கும். "இணக்கமறிந் திணங்கு" என்று ஔவையாரும் கூறினர். இணக்கமுண்டாவதற்கு முன்னே அவர்களது குணங்களை யும் செயல்களையும் ஆராய்தல்வேண்டும். நம் நற்குணங் களையும் நற்செயல்களையும் அழிக்கவல்லராயின் அவர் தம்மை விட்டு நீங்குதல் நன்மையாகும்.

உயிர் இவ்வுலகின்கண் ஓர் உடலோடு தோன்றுகிறது. அவ்வுடலோ அவ்வுயிர்க்கு இருவினைகளால் வருவது. இருவினைகளின் செயல் தீயதாகவே காணப்படுகின்றது. உடல் மாயாசம்பந்தமாதலால் மலவழுக்கு மிகுதியுமுடை யது. மாயையாலாக்கப்பட்டதனால் சரிரத்தை மாயேயம் என்பர். இம்மலங்கள் நல்லுணர்ச்சியில் உயிரைச் செலுத்த வில்லை. இறைவனருளால் இவற்றின் குணங்களையுணர்ந்த ஒருவன் இவற்றினின்றும் நீங்க யத்தனிப்பான். முயலுந் தோறும் இம்மலங்கள் அவனை வெருட்டிப்பற்றும். அவ் வமயங்களில் இவைகளை வென்றவர்களதுறவுவேண்டும். அவர்கள் பரனுணர்வுடையவர்கள். அவர்களினத்துப் போந்த காலத்து வினை தன்செயலற்று நிற்கும்.

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை—யறப்பித்துப்
பத்தரினத் தாய்ப்பா னுணர்வின லுணரு
மெய்த்தவரை மேவா வினை

எனவரும் சிவஞானபோத வெண்பாவாலறிக. பத்தர்கள் யாவர்? யான் எனது எனும் இருவகைப் பற்றுமற்றவர்கள், தமக்குத் தலைவனாய்ப் பதி உண்டு என்று உலகஞானமாகிய பசுஞானத்தாலும் ஆன்மவறிவாகிய ஞானத்தாலும் அவனை அறியமுடியாதென்றும் கண்டவர்கள். அவனருளே கண்ணாகக் காணுதலாகிய பதி கரணம் பெற்ற செம்மை யாளர்கள். பதி என்பது இரண்டு நான்கு கால்களுடைய பசுக்களுக்குத் தலைவன் எனப்பொருளாகும். அவனது அரு ளைப் பெற்று அவனையறியலாம். அவ்வாறு அறியும் மெய் யன்பர்களைத் துன்பங்கள் சாரா. இறைவனது கரணங்கள் ஏன்பெறுதல்வேண்டுமெனின் அவன் அசிந்தித்தன் என் றழைக்கப்படுகின்றான். சிந்திக்க முடியாத தன்மை அவ

னது இயல்பு. "மாற்ற மனங்கழிய நின்ற மறையோன்" என்பது மணிவாசகம். ஆகவே, அவனது சத்தி ஆன்மாவிடத்துப் பதிந்த மாத்திரத்தினாலன்றி அவனையறிதல் கூடாது. சிவகரணம் பெற்ற உயிர்கள் அன்புப் பெருக்கினால் உள்ளமுருகும் செயலுடையவராய்க் காணப்படுவர். சிவவேடத்தைச் சிவனுருவாய்ப் பாவிப்பர். இதனை அருணந்திசிவாச்சாரியார் தாமருளிய சிவஞானசித்தியாரில்

அறிவரியான் றனையறிய யாக்கை யாக்கி
யங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத் தருளாற்
செறிதலினாற் றிருவேடஞ் சிவனுருவே யாகுஞ்
சிவோகம் பாவிக்கு மத்தாற்சிவனு மாவர்
குறியதனு லிதயத்தே யரனைக் கூடுங்
கொள்கையினு லரனுவர் குறியொடுதா மழியு
நெறியதனாற் சிவமேயாய் நின்றிடுவ ரென்று
னேசத்தாற் றொழுதிடுமீ பாசத்தார் விடவே

என்று விளக்கியுள்ளமை நோக்குக. இறைவனது கரணங்களடைந்த உயிர் சிவோகம்பாவனையினால் சிவமேயாகும். இச்சித்தியடைந்த உயிரின் கண்ணே தயிரின் நெய்போன்று சிவன் சிறந்து விளங்குகின்றான். மற்றவுயிர்களின்கண்ணே பாலின் நெய்போலே மறைந்திருக்கின்றான். அகரம் எல்லாவெழுத்துக்களுக்கும் உள்ளீடாய் மறைந்துள்ளது. அகரம் ஆகாரத்திலும் இகரத்திலும் மறைந்து நிற்குந் தன்மையைக் காண்கின்றோம். அங்காப்பினால் வருவது அகரம். மற்றவெழுத்துக்கள் அங்காப்பல்லாது பிறவா. அதுபோன்று உள்ளீடாய் இறைவன் நின்றாலன்றி யாதொன்றும் நிகழாது. பக்குவப்பட்ட ஆன்மாக்களதுள்ளத்தில் மிக்க விளக்கமாக வீற்றிருக்கின்றார். அவ்விளக்கம் அவ்வான்மாக்கள் கொள்ளும் சிவவேடம் அறிவிக்கின்றது.

சிவவேடப்பொலிவு இரண்டு சாதனங்களினாலே பெறப்படுகின்றது. ஒன்று வெண்மைதங்கிய திருநீறு. மற்றது உருத்திராக்கம். விபூதியுடைய பேதங்களும், அதை உண்டாக்கும் திறமும் பெரிய புராணத்துள் முழு நீறு பூசிய முனிவர் புராணத்தின்கண்ணே கண்டுகொள்க.

இப்பெருஞ்சின்னம் ஐசுவரியத்தை மாத்திரம் கொடுக்கும் தன்மையுடையது அன்று, இறைவனது விளக்கத்தையும் உண்டு பண்ணும் பொருளாகும் இறைவனது திருவடிகளைப் பற்றுக்கோடாய்க்கொண்டு ஒழுகும் தூய்மையுடையவன் என்று காட்டும். காத்தற்றொழிில் மேற்கொண்டதாதலின் இரக்ஷை என்பர் அறிஞர். உலக வழக்கில் பேய்பிசாசுகளை ஓட்டுகின்றவர்கள் விபூதியை யணிந்து மந்திரங்களைச் செபிக்கும் தன்மை கண்கூடு. வைதிகக் கலியாணத்திலும் கங்கணத்தின்மீது விபூதியை வைத்து மங்களத்தை உண்டாக்குகின்றனர். உபநிஷத்துக்களில் 13 உபநிஷத்துக்கள் விபூதி மோக்ஷசாதனமென்று கூறும். உருத்திராக்கமும் இறைவனதுடைய திருக்கண்களினின்று உற்பவித்து அணியும் அன்பர்களது அன்பின் திறத்தை காட்டுஞ் சிறப்புடையது. ஆகவே இவ்விரு பெருபொருளும் விளக்கமுடையான் சிவமே. வேடத்தாற் சிவமேயாயினும் உள்ளத்தானும் சிவமாதல் வேண்டும். உள்ளம் நினைக்கும் தன்மையது. மற்ற கரணங்களோடு கலந்து நின்று தொழிற்படும் பான்மையது. உள்ளே நினைத்து அன்பினாலே கசிந்து விழிநீர்பெருக்கி வேதங்கள் நான்கினும் மெய்ப்பொருளாகி விளங்கும் இறைவன் நாமமாகிய திருவைந்தெழுத்தை வாயாரச் சொல்லல்வேண்டும்.

இவ்வாறு சிவவேடம் தரித்துக் காதலாற் கசிந்து சிவ மந்திரத்தை ஓதும் அன்பர்களது உள்ளத்தின் கண்ணே அருளாற் கலந்து நிற்றலால் அவர்கள் சிவமேயாவர். சிவோகம்பாவிக்கும் முறைமையால் பாவனை வயத்தராய் சிவமாதல் திண்ணம். இறைவனை வழிபடுங்காரணமாக அன்பர்கள் தங்கள் உள்ளக்கிழியில் திருவுருவத்தை வைத்து தியானித்துக் கூடுஞ் செயலினாலும் சிவமேயாவர். சிவமேயென நிற்குங் காரணத்தால் தன்மையானும் சிவமே ஆக வேடத்தாலும், பாவனையாலும், செயலாலும், தன்மையாலும் சிவமாம் அன்பர்க்கு உலகச்சார்பு இல்லை. அவர்கட்குக் குலமும், கர்மமும் தாமே நழுவிச் செல்கின்றன. அதி வருணாச்சிரமிகளாகையினாலே அவைகள் அவர்களை பந்தப்படுத்துவதில்லை. அவர்களது நினைவு

எல்லாம் இறைவனது திருவடியே. ஆராத காதல் செலுத்தும் பேரன்புடையவர்கள் எந்த நாட்டவராயினும் அன்புடையவராயின் திருவடிச்சாரும் தகைமையர். அவர்களது பெருமையும் அளவிடுதற் கொண்ணாது அவர்களும் கணக்கிறந்தவர்கள்.

"கருங்கடலைக் கைநீந்துக் கொளவெளிது முந்நீர்க் கடற்கரை நுண்மணலை யெண்ணி யளவிடலாம், பெருங் கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென் றெண்ணிப் பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிடலாகுந், தருங் கடலின் மீனையளவிடலாகும் வானத் தாரகையை யளவிடலாஞ் சங்கரற்றுடமது, சிரங்கொ டிருத்தொண்டர் புராணத்தையளவிட நஞ் சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கு மரிதே" என உமாபதி சிவாச்சாரியர் கூறும் உயர்மொழியினாலே திருத்தொண்டர்களது பெருமைகளை யெல்லாம் அளவிட்டுக் கூறுவது முடியாதென அறிகின்றோம். திருத்தொண்டர்கள் அளவிறந்த பெருமையுடையவர்கள். அவர்களது வரலாற்றைக் கூறும் புராணம் பெரிய புராணமாகும். எனவே அது பெருமையுடையது. அப்பெருமை உலகத்தாருக்கு இறைவனால் காட்டப்பட்டதே. பெரியபுராணம் என்பதற்குப் பல பெரியவர்களது சரிதங்களைத் தொகுத்துச் சொல்லும் புராணம் எனப் பொருள் கூறுவாருமுளர். சேக்கிழார் சுவாமிகள் இப் புராணத்துக்குத் திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிட்டருளினர். 'எடுக்கு மாக்கதை' யென்றும் திருப் பாட்டின் கண்ணே "மாக்கதை" என்றும் பிரயோகித்த தால் பெரிய புராணம் எனும் பெயர் வழங்குவதாயிற்று என்பர். புராணம் என்பதனை நம்மவர்கள் பழைமையான கட்டுக் கதைகள் என்று கருதுகின்றனர். புராதனம் எனின் பழையது என்று பொருள்படும். புராதனமென்பதே புராணம் என மருவிற்று என்று சொல்லுவர். புரா என்னும் சொல்லுக்கு ஜீவனம் என்ற பொருள் உண்டு.

நம்மை நன்னெறிகளிலே செலுத்தி ஜீவிக்கச்செய்யும் ஆற்றல் உடையது புராணம். நூற்கள் 3 பாகுபாடுகளுக்குள் அடங்கும். எஜமான் கட்டளையிடுவது போன்று விளங்கும் நூற்கள் சில. அதனைப் பிரபு சம்ஹிதா என்பர். சிநேகப்பான்மையோடு அறிவு புகட்டும் நூல்கள் சில. இவை சுகிர்சம்ஹிதா என்றழைக்கப்படும். மனைவியின் போற்றுதலுக்கு உகந்த கருத்துக்கள் நிரம்பும் வல்லமையுடைய நூல்கள் சிலவற்றை காந்தாசம்ஹிதா என்பர். வேதம் பிரபு சம்ஹிதா, புராணம் சுகிர்ஸம்ரதிதா, காவியங்கள் காந்தா சம்ஹிதா, இரண்டாம் பாகுபாட்டின்கண் படுவது புராணங்கள். பெரிய புராணமோ சிவமாகிய திரு பெற்றவர்களின் சத்திய சம்பந்தமான சரிதங்கள்.

(தொடரும்)

——

செய்தித் திரட்டு

4—5—52 திருந்தவந்துறை அறநெறிக்கழகம், லால்குடி. : கழகத்தொடக்கவிழா, குன்றக்குடி. சந்நிதானம் தலைமையில் திரு. சிதம்பரநாதஞ் செட்டியார் முதலியோர்கள் பேசினார்கள்.

19—5—52 முதல் ஐந்து நாட்கள் கோவை ரத்தின விநாயகர் ஆலயம் : முதலாவது திருமுறை மகாநாடு. சிவக்கவிமணி, துடிசைகிழார், கோவைகிழார் முறையே தலைமை. கிருத்திகை ஆண்டுவிழா. திரு. கோவிந்தாசாரியார் தலைமை. பல சொற்பொழிவுகள்.

28—5—52 சேக்கிழார் குருபூஜை : கோவை திருக்கூட்டத்தாரால் நடத்தப்பெற்றது. புராணபடனம், குருபூஜை, விழா நிறைவு 29-ம் தேதி.

28, 29, 30—5—52 சேக்கிழார் திருநாள், தேவகோட்டை : மைலம் பெரிய மடம் சிவஞானபாலைய சுவாமிகள் தலைமையில் பல அரிய சொற்பொழிவுகள் நடைபெற்றன.

24, 25—5—52 தூத்துக்குடி சைவசித்தாந்த சபை 68 - வது ஆண்டு நிறைவு. குன்றக்குடி ஆதீனம் சந்நிதானம் தலைமை வகித்தார்கள்.

26—5—52 பாகம்பிரியாள் மாதர் கழகம், திருமதி ராஜேஸ்வரி அம்மையார் தலைமையில் நடைபெற்றது.

28—5—52 குன்றத்தூர் சேக்கிழார் திருப்பணி கழகம், திரு. P. T. S. குமாரசாமி செட்டியார் தலைமையில் நிகழ்ந்தது.

22—5—52 முதல் 7—6—52 வரை உத்தமர் கோயில் திருவிழா நடைபெற்றது.

காரைக்குடி திருவாசகமடத்தில் 27—6—52 வெள்ளிக்கிழமை காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் திருவாசக விழா நடைபெறும். திருப்புறம்பயம் மாணிக்கவாசகத் தம்பிரான் அவர்கள் தலைமை வகிப்பார்கள். உடுமலைப் பேட்டை கா. நயினர் முகம்மது அவர்களும், லால்குடி அ. நடேச முதலியாரவர்களும், பெரியகுளம் வி. சிவக்கொழுந்து அவர்களும், மற்றும் பல அறிஞர்களும் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் என்று முத்துப்பட்டணம் சொ. நாராயணன் செட்டியார் தெரிவிக்கிறார்.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar. B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street, Saidapet, Madras-15. P.I.Card No. M. S. 81.